விடுதலைப்புலிகள்

குரல்: 80 தை - 1998 அன்பளிப்பு: 5/=

உள்ளே

☆ 15 ஆம் நூற்றாண்டில் இழந்ததை 21 ஆம் நூற்றாண்டில் பெறுவோம்
☆ இலங்கையின் பொருண்மியத்தை பேரினவாதம் ஏப்பமிடுகின்றது
☆ 1997: ஒருவருடப்போரும் - அரசியலும்
☆ உரைக்களம்
☆ 1998: வாக்குமூலமும் - வருடப்பலனும்
☆ பகை சிலிர்க்கும் நெஞ்சுரம்
☆ கவிதை

# பொன்விழா கொண்டாடும் பேரினவாதத்திற்கு பேரிடி

சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் உணர்வுப்புலமான கண்டி தலதாமாளிகைப் பகுதியில் 25. 1. 98 அன்று வெடித்த பாரிய குண்டு பேரினவாதிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

சுதந்திரப்பொன்விழாவுக்கு முன்னர் வன்னிநெடுஞ்சாலை கைப்பற்றப்பட்டு - அந்தப்பாதைவழியே வெற்றியின் சாட்சியங்களாக இரண்டு பேருந்துகளில் தமிழர்கள் கண்டிக்கு கொண்டு வரப்பட்டு - பொன்விழாவை இராணுவ வெற்றிவிழாவாக மாற்ற ஆசைகொண்டிருந்த ரத்வத்த குழுவினரின் கனவு ஈடேறவில்லை. பதிலாக, ஒரு குண்டுவாகனமே பொன்விழா அரங்கத்தினுள் நுழைந்து - பேரினவாதிகளை மிரட்டியுள்ளது.

பேரினவாதிகள் ஆசைப்பட்டது போல பெப்ரவரி 4க்கு முன் வன்னியூடாக தரைப்பாதையும் அமைக்கமுடியவில்லை- அதேநேரம் பொன்விழாக்கொண்டாட்ட ஆசையிலும் இடி இறங்கியுள்ளது.

சிங்கள அரசு செய்துவைத்திருந்த பாரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் - பத்தாயிரம் ஆயுதப்படையினரும் சில ஆயிரம் பொலிசாரும் இணைந்து - கண்டி மாநகரைச்சுற்றி வலைப்பின்னலாக அமைத்துவைத்திருந்த தற்காப்பு வியூகத்தை - பகிரங்கமாக ஊடுவி - சாதுரியமாகப்புகுந்து - வீரமாக உள் நுழைந்த குண்டு வாகனமோட்டிகள் பாரிய தற்கொலைத்தாக்குதலை அங்கே நடாத்திமுடித்துள்ளனர்.

கண்டி குண்டுவெடிப்பிற்கு சர்வதேச செய்தி நிறுவனங்களும் முக்கியத்துவம் கொடுத்து செய்திவிவரணம் செய்கின்றன. பொன்விழாவைப் படம்பிடிக்கவந்து - கண்டி வாவிக்கு அருகிலுள்ள விடுதியில் தங்கியிருந்த பி. பி. சி. படப்பிடிப்பாளர் ஒருவர் தலதாமாளிகைக்கு முன்னால் நிகழ்ந்த 'பூகம்பத்தையும் - தனது விடுதி அறையில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியையும் - அதன் விளைவுகளையும் தனது அனுபவ உணர்வுக்கூடாக பி. பி. சி. ஆங்கில சேவையில் வர்ணித்துக்கொண்டிருந்தார். குண்டு கொண்டுசென்ற வாகனத்தை-அதை ஓட்டிச்சென்ற மனிதர்களை - வெற்றிகரமாக உள் நுழைந்த அவர்களின் திறனை, அவர் வியந்து விபரித்துள்ளார்.

முன்னர், யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட வெற்றிவிழா, கண்டியில் கொண்டாடப்பட்டபோது "கட்அவுட் 'டுகள் சகிதம் கதாநாயகனாகப் பவனிவந்த ரத்வத்த, இப்போது, அதிர்ச்சியில் உறைந்து போய் உள்ளார்.

இந்த தாக்குதலுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் எந்தத் தொடர்புமில்லை. ஆயினும், குண்டுத் தாக்குதலுக்கான குற்றச்சாட்டை புலிகள்மீதே, அவர் சுமத்தியுள்ளார். 'இது ஒரு கோழைத்தனமான செயல்' என்று ரத்வத்த கோபாவேசமாகக் குற்றம் சாட்டியுள்ளார். அவரின் வர்ணிப்பு விநோதமாக உள்ளது.

ஈ, எறும்பு கூட அனுமதியின்றி உட்புக முடியாத பாதுகாப்பு அரணுக்குள், ஒரு குண்டு வாகனத்துடன், சில ஆயுததாரிகள் உள் நுழைந்து தாக்குவது எந்தவகையில் கோழைத்தனமானது! இது ஆச்சரியத்தை அளிக்கும் ஒரு தாக்குதல் முயற்சியென்றே இராணுவ அவதானிகள் வியக்கின்றனர். வெளிநாட்டுச் செய்தியாளர்களும் அவ்வாறே மூக்கின்மேல் விரல் வைத்து - தாக்குதலை மதிப்பிடுகின்றனர்.

இந்தநிலையில் அந்த அசாதாரண இராணுவச் செயலை கோழைத்தனமான நடவடிக்கை என்று முத்திரை குத்த - ரத்வத்த - ஏன் விரும்பினாரோ தெரியவில்லை. ஒருவேளை, மாவீரர் துயிலும் இல்லங்களை இடித்தழித்து - இறந்தோரின் புதைகுழிகளைக் கிளறும் செயலில் உள்ள 'வீரம்', இந்தக் குண்டுவாகனத்தைக் கொண்டு சென்ற செயலில் இல்லை என்று நினைக்கின்றாரோ.

தமிழரின் வீடுகள், கோயில்கள் மீது விமானத்திலிருந்து குண்டு போடும் செயலிலும், முகாங்களிலிருந்து ஆட்டிலறி எறிகணைகளை ஏவி, தமிழ்மக்களைக் கொல்லும் செயலிலும் இருக்கின்ற கோழைத்தனம் - சிங்கள மக்களின் உயிரிழப்பைத் தவிர்க்க,நாள் நேரம் குறித்து, அது காரணமாக எழுந்த மேலதிக ஆபத்தையும் குண்டுவாகனத்தில் ஏற்றி தாக்குதலை நடாத்தச் சென்ற தற்கொலைக் குண்டுதாரிகளின் செயலிலும் கோழைத்தனம் இருக்கின்றது என்று ரத்வத்த நினைக்கின்றாரா.

சுதந்திர பொன்விழாவைக் கொண்டாட பேரினவாதிகள் முயலும் இந்தவேளையில் தென் இலங்கை எங்கும் பரவலாக குண்டுகள் வெடித்து - சிங்கள அரசை உலுக்கிவருகின்றன. யாளல வனசரணாலயப் பகுதி, கதிர்காமம் பகுதி, காலி, நுவரெலியாமாவட்டம்.... என தாக்குதல்பரப்பு விரிவடைந்து சிங்கள தேசத்தை தொந்தரவு செய்கின்றது. ○



**கைமாறிய மரபாயுதம் :**
கைப்பற்றப்பட்ட ராங்குடன் புலிவீரர்கள்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

# 15ஆம் நூற்றாண்டில் இழந்ததை 21ஆம் நூற்றாண்டில் பெறுவோம்

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers Of TAMIL EELAM
புலிகளின் குரல்

தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்திற்கு ஒரு படி முறை வளர்ச்சி உண்டு. ஒற்றையாட்சியமைப்பின் கீழ் அரசியல் உரிமைகளைப் பெற்று – வாழப் போராடிய தமிழ் இனத்தை தன்னாட்சி உரிமைக்காகப் போராடும்படி, சிங்கள அரசின் இனவாதச் செயற்பாடுகள் நிர்ப்பந்தித்தன.

ஜனநாயகரீதியில்– அகிம்சைவழியில் தமிழர் நடாத்திய உரிமைப் போராட்டத்தை வன்முறைவழியில் – ஆயுதப்போராட்டப் பாதையில் – அரசபயங்கரவாதம் தள்ளி விட்டது.

தமிழரின் தன்னாட்சி உரிமைக்கான ஆயுதப்போராட்டத்திற்கு புலிகள் இயக்கம் தலைமை கொடுத்தது.

இந்த தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை 1977 பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள், தங்கள் வாக்குரிமையால் அங்கீகரித்து – ஆதரித்திருந்தனர்.

ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டி விடுவது என்ற இலட்சியத்தில், புலிகள் இயக்கம் அன்றிலிருந்து உறுதியாக இருக்கின்றது. எத்தனையோ சோதனைகள் – நெருக்கடிகள் சூழ்ந்த போதும் அந்த அரசியல் இலட்சியத்திலிருந்து வழுவாது – கொண்ட கொள்கையில் உறுதியாக உள்ளது. தமிழரின் தன்னாட்சிப் போராட்டத்தையும் உயர்நிலைக்கு வளர்த்துவிட்டுள்ளது.

ஆயினும், தமிழ்மக்கள் மீது அழிவையும் – அவலத்தையும் திணித்து, அவர்களது அரசியல் உறுதியை உடைக்க, சிங்கள அரசு பலவகையிலும் முயல்கின்றது. அதன் உச்சக்கட்டமாக ஒரு பெரும் போரையும் தமிழ் இனத்தின் மீது தொடுத்துள்ளது. எனினும், அரசின் இனஅழிப்புத்திட்டத்தை விளக்கி – அரசியல் விழிப்புணர்வை ஊட்டி – மக்களையும் அணிதிரட்டி தமிழரின் போராட்டத்தை, புலிகள் இயக்கம் உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கின்றது.

ஆயுதப்போராட்டத்தை நடாத்திக் கொண்டே தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்க்க சிங்கள அரசுடன், அரசியல் பேச்சுக்களிலும், புலிகள் இயக்கம் ஈடுபடுகின்றது. திம்பு மாநாட்டிலிருந்து யாழ்ப்பாணப் பேச்சுக்கள்வரை பங்கு கொண்டிருந்தது. ஆனால், அரசியல்தீர்வு என்ற விடயத்தையும், பேச்சுவார்த்தைகள் என்ற நடைமுறையையும் உலக சமூகத்தை ஏமாற்றும் ஒரு தந்திரமாகவே சிங்கள அரசு பயன்படுத்தி வருகின்றது. அதே வேளை, தமிழரின் தன்னாட்சிப் போராட்டத்தை மழுங்கடித்து–தமிழினத்தின் தேசிய அடையாளங்களைச் சிதைக்கும் நாசகார நோக்கத்துடனும், அவற்றைச் சிங்கள அரசு பயன்படுத்துகின்றது.

சிங்கள அரசின் சதி அரசியலுக்குப் பலியாகாது – போர் நிர்ப்பந்தங்களுக்கும் இடங்கொடுக்காது தமிழரின் தன்னாட்சிப் போராட்டத்தை – தலைவர் பிரபாகரன் – தொடர்ந்தும் உறுதியாக வழிநடாத்திக் கொண்டே இருக்கின்றார்.

இதேசமயம் போராடவென்று புறப்பட்ட தமிழ்க்குழுக்களின் தலைமைகள் பேரினவாதத்தின் அடிவருடிகளாகமாறி – தமிழர் போராட்டத்திற்கு துரோகமிழைத்துக்கொண்டிருக்கின்றன. தமிழ்க்குழுக்களின் இத் துரோகச் செயற்பாட்டை சந்திரிகா அரசாங்கம் நன்றாகப் பயன்படுத்தி வருகின்றது. அரசியல்ரீதியிலும் – இராணுவரீதியிலும் – அன்றிலிருந்து இன்றுவரை – தமிழர் போராட்டத்திற்கு இத் தமிழ்க்குழுக்கள் இழைத்துவரும் நாசங்கள் ஏராளம்.

சந்திரிகா அரசாங்கம் பதவியேற்றதும் தமிழரின் இனப்பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கப்போகின்றது என உலகம் நம்ப வைக்கப்பட்டது. சந்திரிகாவின் சாதுரியப்பேரினவாத நிலைப்பாட்டால், புலிகளின் அரசியல் உறுதியை வெற்றி கொள்ளமுடியவில்லை. எனவே, தமிழ் மக்கள் வேறு புலிகள்வேறு என்று வகைப்படுத்திக்காட்டிய அம்மையார் தமிழர்களுக்கு தீர்வுத்திட்டம் புலிகளுக்கு போர்த்திட்டம் என்றுகூறி மாபெரும் படையெடுப்புத்திட்டத்தை – தமிழாநிலத்தில் – அரங்கேற்றினார்.

இன அழிப்பிற்கானபோர் என்ற பேரினவாத நிலைப்பாடு, சமாதானத்திற்கானபோர் என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டது. தமிழர்நிலத்தை ஆக்கிரமித்தல் என்ற பேரினவாத இலட்சியம், தமிழ்மக்களை விடுவித்தல் என்று வார்த்தை மாற்றம் செய்யப்பட்டது.

சிங்களப்படையெடுப்பை, புலிகள் இயக்கம் தந்திரமாகவும் – வீரமாகவும் எதிர்கொண்டது. அம்மையாரின் வார்த்தை ஜாலங்கள் நீண்டநாட்களுக்கு நிலைக்கவில்லை. அம்மையாரின் தீர்வுப் பொதியும் செத்துக்கொண்டிருக்கின்றது. அவரின் தேர்தல் முயற்சியும் மக்களினது கண்டனத்திற்கு உள்ளாகிக்கொண்டிருக்கின்றது. அத்துடன் அவரது இராணுவத் திமிரையும், புலிகள் இயக்கம் உடைத்தெறிந்து வருகின்றது. இப்போது அம்மையார் அரசியல்ரீதியாக அம்பலப்பட்டு நிற்கின்றார். இராணுவரீதியாக நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்.

சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் உண்மை முகத்தை – அதன் தமிழ் இன விரோதகுணத்தை புலிகள் இயக்கமே சரியாக கண்டறிந்துள்ளது என்றும் – புலிகளின் அரசியல் தீர்க்கதரிசனமே பலித்து வருகின்றது என்றும் இப்போது, பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இதனால் புலிகளின் அரசியல் நிலைப்பாடே சரியானது என்று அங்கீகரிக்கப்படுகின்றது. புலிகள் இயக்கத்தை விமர்சித்தவர்கள் கூட இந்த உண்மையை இப்போது ஏற்றுக்கொண்டுவருகின்றனர்.

இவைகாரணமாக முன்னெப்போதையும் விட, இப்போது, புலிகள் இயக்கத்தின் பின்னால் தமிழ்மக்கள் அணிதிரள்கின்றனர்.

குறிப்பாக, உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்கள் போராட்டத்திற்கு வழங்கி வரும் ஆதரவு பெருமளவில் அதிகரித்து வருகின்றது. இதனால் அந்தந்த நாட்டு அரசுகளிலும் – அதன் மக்களிலும் கருத்து மாற்றம் ஏற்படவாய்ப்புகள் பிறந்துள்ளது. இந்த மாற்றமானது தமிழரின் போராட்டத்திற்கு ஆதரவான ஒரு சர்வதேச சூழலை ஏற்படுத்தும் வகையில் வளர்ச்சி பெறுகின்றது.

புதிய வருடம் தமிழரின் தன்னாட்சி உரிமைப்போராட்டத்திற்கு வலுசேர்க்கும் ஆண்டாகவே திகழப்போகின்றது. இராணுவ ரீதியாக என்னதான் முயற்சி எடுத்தாலும் புலிகள் இயக்கத்தை வெற்றி கொள்ள முடியாது என்பதையும் – அரசியல் ரீதியாக எத்தகைய கூத்துக்களை நடாத்தினாலும் தமிழ்மக்களை ஏமாற்ற முடியாது என்பதையும், சிங்கள அரசு இவ்வாண்டில் ஏற்றுக்கொள்ளத்தான் போகின்றது. புதிய நூற்றாண்டின் ஆரம்பமானது, ஈழத்தமிழரின் விடிவிற்கான நுழைவாயிலாகும். 15ஆம் நூற்றாண்டில் எமது முன்னோர் இழந்த தன்னாட்சி உரிமையை 21ஆம் நூற்றாண்டில் மீண்டும் நாம் பெறுவோம் என்று தமிழ் மக்களாகிய நாங்கள் உறுதி எடுப்போம். ஈழத்தமிழருக்குத்தான் 'வெற்றி நிச்சயம்', சிங்களப் பேரினவாதத்திற்கு அல்ல. ○

## நுணுக்குக்காட்டி

உலக அரங்கிலே இந்த நூற்றாண்டின் மூத்த பெரும் போராளிகளான நெல்சன் மண்டேலா, யாசிர் அரபாத், ஜெரி அடம்ஸ் போன்றவர்கள் அங்கீகரிக்கப்பட்டு பெருந் தலைவர்களாகி வருகின்றனர். இந்த வரிசையிலே வேலுப்பிள்ளை பிரபாகரன் என்ற பெயரும் வரும் நிலைமை தோன்றலாம்.

அஜித் ரூபசிங்க
தேசிய சமாதானப் பேரவைத்தலைவர்
தினக்குரல்
ஜன. 04 , 1998

புத்தபிரானால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக சிங்களவர்கள் தம்மைக் கருதுவது போலவே, பல்வேறு நாடுகளில் வாழும் பௌத்தர்களும் தம்மையே பௌத்தத்தைக்காக்க புத்தபிரான் தேர்ந்தெடுத்தார் என்று கூறுகின்றனர்.

– பேராசிரியர் மகிந்த பலிகவதன
தென்னை மோனிங் போஸ்ற
ஒக். 8, 1997.

"புண்பட்டுப் போயுள்ள தமிழ் மக்களின் மனங்களில் அரசாங்கம் கத்தியால் குத்துகிறது."
கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தன
தினக்குரல்
ஜன.04 , 1998 ○



www.eelamview.com

# இலங்கையின் பொருண்மியத்தை பேரினவாதம் ஏப்பமிடுகின்றது

இன்று போருக்கென பெருந்தொகை நிதி ஒதுக்கப்படுவது போல, அன்று – அரச பொருளாதாரத்தின் கணிசமான பகுதி சிங்களக்குடியேற்றங்களை நிறுவுவதற்கே ஒதுக்கப்பட்டிருந்தது.

விவசாய அபிவிருத்திக்கான குடியேற்றத்திட்டங்கள் என்று உலகிற்குச் சொல்லப்பட்டாலும், உண்மையில் அவை, தமிழர் நிலங்களை சிங்களவர்களுக்கு உடமையாக்கும் பேரினவாதத்தின் நில அபகரிப்புத்திட்டங்களேயாகும்.

மகாவலி அபிவிருத்தித்திட்டம் என்ற பெயரில் ஜே. ஆர். அரசு பல்லாயிரம்கோடி ரூபாய்களை செலவிட்டிருந்தது. இதுவும் தமிழர் நிலத்திலேயே நடந்தது. சிங்களவர்களே குடியமர்த்தப்பட்டனர். உத்தியோகபூர்வ குடியேற்றங்களை ஒருபுறம் நடாத்திக்கொண்டு அத்துமீறிய வகையிலும் சிங்களவர்களை தமிழர்நிலத்தில் குடியமர்த்தியது.

நில அபகரிப்பே குடியேற்றங்களின் உண்மையான நோக்கம் என்பதால் அங்கே விவசாய அபிவிருத்தி பெருமளவில் நடைபெறவில்லை. அரசின் சலுகைபெற்ற மனிதர்களாக அரச பொருளாதாரத்தில், குடியேறிகள் வாழ்க்கை நடாத்துகின்றனர்.

வட – கிழக்கில் சிங்களவர்களைக் குடியமர்த்தியதுபோல மலையகத்திலும் சிங்களவர்களைக் குடியமர்த்தியது.

தமிழர்களின் உழைப்பில் தங்கியிருந்த பெருந்தோட்டப் பொருளாதாரத்தை சிங்களவர் கைகளுக்கு மாற்ற பேரினவாதம் விரும்பியது நுட்பமாகவும் – கவனமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய தேயிலை – இறப்பர் தோட்டவேலைகளில், வேலை அனுபவமற்ற சிங்களத் தொழிலாளர்களையும் அரசு ஈடுபடுத்தியது. அதனால் உற்பத்தித்தரம் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, அங்கு குடியேற்றப்பட்ட சிங்களவர் நலன்பேண தோட்ட வருமானத்தில் கணிசமானபகுதி வழங்கப்பட்டது. இந்தச் சலுகை தமிழ்த் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை.

பெருந்தோட்டப் பொருளாதாரத்தை சிங்களவரின் கைகளுக்கு மாற்றவிரும்பிய பேரினவாதத்தின் முயற்சி, தோட்டப் பொருளாதாரத்தைச் சிதைத்தது. இது அரச பொருளாதாரத்தையும் பாதித்தது.

வட – கிழக்கு மாநிலத்திற்கு அப்பால் எந்த ஒரு பெரிய குடியேற்றத்திட்டங்களும் இதுவரை நடாத்தப்படவில்லை என்பது இங்கே சுட்டிக்காட்டத்தக்கது. காடுகளின் பெரும்பகுதி தென்பகுதியில் இருந்தும் சிங்களவர்களைக் குடியேற்றவென, அரசு அவற்றைப் பயன்படுத்தவில்லை.

குடியேற்றங்களை நிறுவும்போதும் பெருமளவு அரசபொருளாதாரம் செலவிடப்பட்டது. குடியேற்றங்களைப் பராமரிக்கவும் பெருமளவு அரசபொருளாதாரம் செலவிடப்படுகின்றது.

தீவின் ஆட்சி அதிகாரம் சிங்களவர் கைகளில் சென்றடைந்ததிலிருந்து பேரினவாதத்தின் விருப்பங்களை நிறைவேற்றுவதிலேயே அரசபொருளாதாரத்தின் பெரும்பகுதி செலவிடப்பட்டுவருகின்றது. இலங்கைத்தீவை சிங்கள பௌத்தர்களின் தனியுடமையாக மாற்றுவதே பேரினவாதத்தின் இறுதி இலட்சியம்.

இலங்கையின் பொருண்மிய வளர்ச்சிக்குத் தடையாக இனப்பிரச்சனை உள்ளது. இனப்பிரச்சனையைத் தீர்த்துவிட்டு தீவின் பொருண்மியத்தை அபிவிருத்திசெய்து, புதியதொரு சகாப்தத்திற்குள், இலங்கையை இட்டுச்செல்லவேண்டும் என்ற நோக்கம் பேரினவாதத்திற்கு இல்லை. எத்தனை யுகங்கள் சென்றாலும் இத்தீவில் இருந்து தமிழினத்தைத் துடைத்தெறிந்து, இதை சிங்களவர் நடாக்கவேண்டும் என்ற மகாவம்ச இலட்சியத்துடனேயே சிங்களஅரசு இன்றும் உள்ளது.

கடந்த 50 வருடங்களாக சட்டவடிவங்கள் ஊடாகவும் – சாதுரிய அரசியல் செயற்பாடுகள் மூலமாகவும் தமிழினத்தின் தேசியபலத்தை ஒடுக்க பேரினவாதம் எடுத்த நடவடிக்கைகள் அதற்குப் பெரிய வெற்றியைப் பெற்றுக்கொடுக்கவில்லை. மாறாக, தமிழர் தேசிய உணர்வை வளர்த்துவிட்ட கைங்கரியத்தையே அவை செய்துமுடித்துள்ளன.

இப்போது, ஒரு தீவிரமான போர்மூலம் தனது பேரினவாத இலட்சியத்தை அடைந்துவிட பேரினவாதம் துடிக்கின்றது. இரண்டு இராணுவங்கள் மோதுவதுபோல, இனப்போர் பூதாகரவடிவம் எடுத்துவிட்டது. இதனால், போருக்கென தனது பொருண்மியவளத்தையே – சிங்கள அரசு – அடமானம் வைத்துவிட்டது.

போரை நடாத்த அரசு செலவிடும் பணம்தான் பாதுகாப்புச் செலவினத்திற்குள் அடங்குகின்றது. ஆனால், போரால் ஏற்பட்டமொத்தநட்டம் வேறு கணக்கில் உள்ளது.

உதாரணத்திற்கு 1996ஆம் ஆண்டைய பாதுகாப்புச் செலவினம் அதாவது போரை நடாத்தமட்டும் அரசுசெலவிட்ட பணம் சுமார் ஐயாயிரம் கோடி ரூபாய்கள் ஆனால், போரால் – அந்த வருடத்தில் அரசபொருளாதாரத்திற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் 22 ஆயிரம் கோடிரூபாய்கள் என மார்க் நிறுவனம் என்ற பொருளியல் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் போருக்குச் செலவிடும் பணத்தைப்போன்று நான்கு மடங்கு பணம், போரின் விளைவுகளால் அழிந்து போகின்றது.

நஷ்டஈடுகொடுத்தல் – நிவாரணம் வழங்கல் – புனர்நிர்மாண வேலைகள் செய்தல் போன்ற போரின் விளைவுகள் காரணமாக செலவிடப்பட்ட பணமும், அத்துடன், போர் காரணமாக இழக்கப்பட்ட சுற்றுலாத்துறை – வெளிநாட்டு முதலீடு போன்ற வருமான இழப்புக்களும் இந்த வகைக்குள் அடங்கும்.

சுற்றுலாத்துறை வீழ்ச்சியால் சிறிலங்காவின் தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்படும் வருமான இழப்பை உதாரணத்திற்கு இங்கே பார்ப்போம். சுற்றுலாத்துறையால் மட்டும் சிறிலங்கா அரசிற்கு வருடாந்தம் 1150 கோடிரூபாய்கள் வருமானம் கிடைக்கின்றது. இதைவிட, இத்துறையில் சுமார் 75,000 பேர் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். இதுதவிர, உல்லாசப் பயண விடுதிகள் மீதான வருமான வரி வருமானம்– ஊழியர்களின் வருமான வரி வருமானம் – எயர்லங்கா விமான சேவை மூலம் வருமானம் – விமானநிலையக் கட்டண வருமானம் – விமானங்களுக்கான எரிபொருள் விற்பனை வருமானம் – மிருகக்காட்சிச்சாலை, தொல்பொருட்காட்சிச்சாலை வருமானம் – கைவினைப்பொருட்களின் விற்பனை வருமானம்... என்று பல்வகை துணை வருமானங்கள் உண்டு. உல்லாசப்பயணத்துறை வீழ்ச்சிகண்டால் மேற்குறித்த உபவருமானங்களும் வீழ்ச்சியடையும். இதேபோன்று வெளிநாட்டு முதலீடுகள் பாதிக்கப்பட்டாலும் அதன்



உபபிரிவுகளின் வருமானங்களும் வீழ்ச்சியடைந்து தேசியபொருளாதாரத்தை நலிவடையச்செய்து அரசபொருளாதாரத்தை படுகுழியில் தள்ளிவிட்டுவிடும்.

இனப்போர் தீவிரமடைந்த 1983ஆம் ஆண்டிலிருந்து கடந்த ஆண்டுவரை பாதுகாப்புச்செலவீனம் என்ற பெயரில் – போரை நடாத்த வெனமட்டும் – சிங்கள அரசு, மொத்தம் இருபத்துநான்காயிரம் கோடிரூபாய்களை (24, 000 கோடி)செலவிட்டுள்ளது.

இதேவேளை, இந்த 14 வருடகாலப் போராலும் மற்றும் போரின் அனைத்துவகை விளைவுகளாலும், சிறிலங்கா அரசானது மொத்த இழப்பாக இரண்டு இலட்சத்து முப்பத்துநான்காயிரம் கோடிரூபாய்களை (2, 34,000 கோடி) இழந்துள்ளது.

சமுத்திரத்தை ஒத்த இந்தப் பணத்தை இலங்கைத்தீவின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தியிருந்தால் இத்தீவு எத்தகைய செழிப்புடன் இருந்திருக்கும்!

1978 ஆம் ஆண்டிற்குப் பின்னர் எந்த ஒரு பாரிய அபிவிருத்தித்திட்டங்களையும் சிங்கள அரசு செய்யவில்லை. நிதியின்மைதான் காரணம்.

போர்த்தேவைகளை ஈடுசெய்யும் நிதியைப்பெறுவதற்காக இப்போது, தனது இயற்கை வளங்களையும் — மக்கள் நலன்பேணும் அரச நிறுவனங்களையும் வெளிநாட்டவருக்கு விற்க அரசு முடிவெடுத்துள்ளது.

சிறிலங்காவின் பாரிய தொலைத்தொடர்பு நிறுவனமான ரெலிகொம் கடந்தவருட பாதுகாப்புச் செலவினத்தை ஈடுசெய்யவென விற்கப்பட்டது என்ற தகவலை, பட்டிவீரக்கோன் என்ற பாராளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளார்.

இதேவேளை, எப்பாவெல என்ற இடத்தில் 50 ச. கி. மீற்றர் பரப்பளவில் உள்ள பொஸ்பேற் கனிவளத்தை, சந்திரிகா அரசு விற்பனை செய்யவிருக்கின்றது. புல்மோட்டையில் உள்ள இல்மனைற் கனிவளத்தை வெளிநாட்டிற்கு விற்றுக்கொண்டிருப்பது நாம் அறிந்ததே.

இந்தவருட (1998) போர்ச் செலவினத்தை ஈடுசெய்ய எயர்லங்கா நிறுவனத்தையும் – தபாற்பகுதி சேவைகளையும் – கொழும்பு துறைமுகத்தையும் – தனியாருக்கு விற்கும் திட்டத்துடன் சந்திரிகா அரசாங்கம் உள்ளது என்று ஐ. தே. கட்சியினர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இன்னும் ஒன்று, இரண்டு வருடத்துள் விற்பதற்கென்று ஒன்றுமில்லாமல் சிங்கள அரசு ஒட்டாண்டி நிலையில் இருக்கும் என்று சிங்களத்தின் எதிர்க்கட்சிகள் கண்டன விமர்சனம் செய்கின்றன.

இலங்கை ஒரு சிங்கப்பூராக எதிர்காலத்தில் மாற்றமடையும் என்று, 1970களில் பொருளியல் நிபுணர்கள் ஆருடம் கூறியிருந்தனர் ஆனால், ஆசியாவின் நோயாளியாக இலங்கையை – சிங்கள ஆட்சியாளர்கள் – உருமாற்றி வருகின்றனர். பேரினவாதத்தின் குதிரையாக சிறிலங்கா அரசு [illegible] இருக்கும்வரை, இந்த நிலையை மாற்றமுடியாது. ○



www.eelamview.com

# -1997- ஒரு வருடப் போரும் அரசியலும்



ஆனையிறவு - பரந்தன் மீதான பெருந்தாக்குதலுடன் (ஜன. 9) ஆரம்பமான கடந்த போராண்டு, மன்னகுளம் அதிரடியுடன் (டிச. 4) முடிவடைந்துள்ளது.

இந்தப் போராண்டின் கதாநாயகனாக ஜயசிக்குறுய் விளங்குகின்றது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றப் படையினர் நடாத்திய சூரியக்கதிர் நடவடிக்கையுடன் - தமிழர்நிலத்தில் - மரபுப்போர் தீவிரம் பெற்றிருந்தது. எனினும் கடந்த போராண்டின் 8 மாதங்களை விழுங்கிய ஜயசிக்குறுய் சமர், 1997 க்கு ஒரு வரலாற்றிடத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளது. அதாவது தமிழீழவிடுதலைப் போராட்டம் சந்தித்த முதலாவது பாரிய மரபுப் போர் ஆண்டாக, கடந்த போராண்டு இடம் பிடித்துள்ளது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக கெரில்லாப் போர் முறையின் முடிசூடா மன்னர்களாக விளங்கிவரும் புலிவீரர்கள், ஜயசிக்குறுயிக்கு எதிரான சமரில் காட்டிவரும் போர்த்திறமை காரணமாக மரபுப்போர் முறையிலும் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளனர்.

பரந்து - விரிந்த இந்த மரபுப்போர் அரங்கினுள் கெரில்லாப்பாணியில் நுழைந்து - படையினரின் பிரதான நிலைகள் மீது பெரியளவிலான தாக்குதல்களைத் தொடுத்த ஒரு உயர் இராணுவ பரிமாணத்தையும், கடந்த போராண்டில் புலிகள் சாதித்துள்ளனர்.

## போர் இழப்புகள்

மரபுப்போர் முறையில் சண்டைகள் நிகழ்ந்துள்ளதாலும் - இராணுவம் கடைப்பிடித்த அதிஉயர் விழிப்பு நிலையின் மத்தியில் புலிகளின் தாக்குதல்கள் இடம்பெற்றதாலும் அதிகளவு உயிரிழப்புகளைக் கண்ட வருடமாக 1997 திகழ்ந்துள்ளது.

இந்தத் தனியாண்டில் மட்டும் 3500 ற்கும் மேற்பட்ட படையினர் பலியாகியுள்ளனர். சுமார் 8000படையினர் காயமடைந்துள்ளனர். இதே வேளை, தமிழீழத்தின் அனைத்துப் போரரங்குகளிலும் இடம்பெற்ற சண்டைகளில், ஏறக்குறைய 1400 புலிவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். சுமார் 1000 புலிவீரர்கள் காயமடைத்துள்ளனர்.

1995 இல் யாழ்ப்பாணம் ஆக்கிரமிக்கப்பட்ட மகிழ்ச்சியிலும் - 1996 இல் கிளிநொச்சி கைப்பற்றப்பட்ட சந்தோசத்திலும் இருந்த சிங்களப்படை, 1997ஆம் ஆண்டை ஒரு இலட்சிய ஆண்டாக வரித்திருந்தது.

அதாவது, தமிழர்சேனையாகிய புலிப்படைக்கு சமாதி கட்டும் சாதனை வருடமாக 1997ஆம் ஆண்டை சிங்கள இராணுவவாதிகள் நிர்ணயித்திருந்தனர். அத்துடன், குடாநாட்டிற்கு ஒரு தரைப்பாதை அமைத்து -வடக்கைத் தெற்குடன் இணைத்து வெற்றி விழாக் கொண்டாடவும் பேரினவாதிகள் ஆசைப்பட்டனர்.

ஆனால், இந்த பாதை அமைப்புத் திட்டத்தை சிங்களப் படைகள் ஆரம்பிக்க முன்னரே பரந்தன் - ஆனையிறவு தளப்பகுதி மீது புலிகள் ஒரு அதிரடித் தாக்குதலை நடாத்தி படைக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்திருந்தனர்.

இந்தப் பெருந்தாக்குதலில் 300 படையினர் கொல்லப்பட்டிருந்தனர். ஒன்பது ஆட்டிலறிகளும்-பல்லாயிரம் எறிகணைகளைக் கொண்ட களஞ்சியங்களும் தாக்குதலில் எரியுண்டு போனது. இராணுவக் கற்பனையில் மூழ்கிக்கிடந்த படைத் தலைமைக்கு இந்த வியப்பூட்டும் அதிரடி புலிகளின் பலத்தை நினைவூட்டியது. அத்துடன் பாதை அமைப்பு முயற்சி சந்திக்கப் போகும் எதிர்ப்பின் தீவிரத்தையும் இது உணர்த்தியிருந்தது.

இந்த நிலையில், புலிகளின் போர்வலுவைக் குறைத்து விட்டு -அதன் பின்னர்- பாதை அமைப்பு முயற்சியைத் தொடங்க இராணுவத்தலைமை விரும்பியது. 'எடிபல' இராணுவ நடவடிக்கை அத்தகைய நோக்கத்திற்காகவே ஆரம்பிக்கப்பட்டது.மன்னார் மாவட்டத்தை ஊடறுத்து பாதை அமைப்பது போல பாசாங்கு காட்டி- புலிகளை சமருக்கிழுக்க படைத்தலைமை முயன்றது.

## தந்திரோபாயப் பதிலடி

சிங்களப் படைத் தலைமையின் திட்டத்திற்கமைய சமரை நடாத்த தலைவர் பிரபாகரன் முனையவில்லை. 'எடிபல' வுக்கு எதிராக சமர்த்தவிர்ப்புத் தந்திரோபாயத்தைக் கைக்கொண்ட தலைவர் அவர்கள், படைத்தலைமையின் தந்திரோபாயப் போர்த்திட்டத்திற்கு பதிலடி கொடுத்தார். 'எடிபல' களமுனையை விட்டு, புலிவீரர்களை விலகியிருக்கச் செய்தார், இதனால் புலிகளின் போர் வலுவைக் குறைத்தல் என்ற இராணுவ நோக்கம் ஈடேறவில்லை. ஆயினும் சமர் தவிர்ப்பின் மூலம் புலிகள் பெற்ற தந்திரோபாய வெற்றியை மழுங்கடிப்பதற்காக 'எடிபல' நடவடிக்கையை, படைத்தலைமை ஒப்புக்காக நடாத்தி முடித்தது.

புலிகளின் படைபலம் தொடர்பாக படைத்தரப்பில், அண்மைக் காலத்தில் - இரு வேறு கருத்துக்கள் உலாவுகின்றன. யாழ்ப்பாணச் சமருக்குப் பின்னர் புலிகளின் இராணுவ பலம் ஒடுக்கப்பட்டு விட்டது என்று ஒரு பகுதியினர் நம்புகின்றனர். இந்த வகைக்குள் ரத்வத்தவும் அடங்குகின்றார். ஆனால் மறுபகுதியினர் அவ்விதம் நம்பவில்லை. பெரும்பாலான களமுனைத் தளபதிகள் இந்த இரண்டாவது வகைக்குள் அடங்குகின்றனர்.

எடிபலவை எதிர்கொள்ளாது, புலிகள் தவிர்த்ததை- முதல் வகையினர் தமது கருத்திற்கு ஆதாரமாக எடுத்து தரைப்பாதை திறப்பிற்கான இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க முடிவெடுத்தனர். ஜயசிக்குறுய் தொடங்கியது. இவ்விதம், புலிகள் பற்றி தப்பான கணிப்புடன் பாதை அமைப்பு முயற்சி ஆரம்பமானது.

வவு- கிளி. நெடுஞ்சாலையைக் கைப்பற்றி குடா நாட்டிற்குத் தரைப்பாதை அமைப்பதே சந்திரிகா அரசாங்கத்தின் உண்மையான திட்டம். இந்தத் திட்டமானது விநியோகப் பாதை அமைப்பிற்கும் அப்பால் வேறும் சில இராணுவ நோக்கங்களைக் கொண்டிருக்கிறது. புலிகளை அழித்து தமிழரது ஆயுதப் போராட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பது அதில் இறுதியானது.

படையினர் நடாத்திய ரிவிரச மற்றும் சத்ஜய இராணுவ நடவடிக்கைகளாலும், புலிகள் தொடுத்த ஓயாத அலைகள் மற்றும் பரந்தன்- ஆனையிறவு தளப்பகுதி மீதான தாக்குதல்களாலும் தனது ஆட்பலத்தின் பெரும்பகுதியை புலிகள் இயக்கம் இழந்து விட்டது என்று படைத்தலைமை கணித்திருந்தது.

இந்தநிலையில், புலிகளின் நடவடிக்கை மையமான வன்னியின் இதயப்பகுதியூடாக ஒரு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து-புலிகளை நேரடிச் சண்டைக்கு இழுத்து- அவர்கள் மீது பெருமளவு படைக்கல சக்தியை பிரயோகித்து, உயிரிழப்புகளை உண்டுபண்ணி- புலிகளின் எஞ்சிய மரபுப் போர்ப் பலத்தையும் உடைத்து- புலிகள் இயக்கத்தை ஒரு கெரில்லாக் குழுவாக உருமாற்றி விடும் இராணுவத் திட்டத்துடன் - சந்திரிகா அரசாங்கம் உள்ளது. இவ்விதம் செய்துவிட்டு, கைப்பற்றிய வவு - கிளி. நெடுஞ்சாலையை அரணாகவும் - புறப்படு தளமாகவும் பயன்படுத்தி நெடுஞ்சாலையின் கிழக்குப் பகுதி மீதும் (முல்லைத்தீவுப் பக்கம்) - மேற்குப் பகுதி மீதும் (மல்லாவி - அக்கராயன் பக்கம்) தனித்தனியாக படையெடுப்புக்களை நடாத்தி புலிகளை அடியோடு துடைத்தெறிந்து விட வேண்டும் என்ற இறுதித் திட்டமும் இராணுவத்தின் போர்த் திட்டத்தில் உள்ளது.

## ஆப்பிழுத்த குரங்கு

ஆனால், சிங்கள அரசாங்கம் விரும்பியது போல அதனது இராணுவத் திட்டம் பலிக்கவில்லை. நடவடிக்கைப் படையினர் மீது, புலிகள் தொடுத்த பாரிய தாக்குதல்களும் மற்றும் மூன்று மாத காலம் கடுமையாக நடந்த புளியங்குள சண்டை



www.eelamview.com

களும் ஜயசிக்குறுய் படையினரை நிலை தடுமாற வைத்து விட்டது. இப்போது, தான் விரித்த இராணுவ வலைக்குள் தனது துருப்புக்களையே சிக்க வைத்து– திண்டாடிக் கொண்டிருக்கின்றது.

புலிகளின் மரபுப்போர்ப்பலத்தை அடியோடு துடைத்தெறியும் இலக்கைக் கொண்ட ஜயசிக்குறுயில், சிங்களத்தின் மரபுப்போர்ப்பலமே சிதைவுண்டுவருகின்றது. 1997இன் முக்கிய இராணுவ அம்சங்களில் இதுவுமொன்றாகும். தனது பேரினவாத இலட்சியம் ஈடேறப்போகும் ஆண்டென்று சிங்கள அரசு நம்பிய 1997ஆம் ஆண்டு, அதற்குப் பாரிய இராணுவ நெருக்கடியைக் கொடுத்த சிக்கல் ஆண்டாக அமைந்துவிட்டது.

## இடப்பெயர்வு அவலம்

கடந்த மூன்று ஆண்டுகளாக போர் மேகம் வடதமிழீழத்தில் மையங்கொண்டுள்ளது. சண்டைகளின் தீவிரம் காரணமாக சிங்களத்துருப்புக்களின் பெரும்பகுதி வடபுலப்போர்முனையிலேயே கட்டுண்டுகிடக்கின்றது.

இதனால், தென்தமிழீழப் போர்அரங்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை நடாத்தமுடியாத சூழலில் சிங்கள அரசு உள்ளது. இந்த யதார்த்தநிலை காரணமாக, தென்தமிழீழ மக்கள் கடந்த 10 வருடங்களாகச் சந்தித்த இடப்பெயர்வு அவலம், கடந்த மூன்று வருடங்களில், பெருமளவு குறைந்துள்ளது. அதேசமயம் வடபுலமக்கள் இடப்பெயர்வுப் பூகம்பத்திற்குள் சிக்கியுள்ளனர். கடந்த ஆண்டிலும் அந்த அவலம் தொடர்ந்துள்ளது.

கடந்த போராண்டில் எடிபல நடவடிக்கையால் மன்னார் மாவட்டத்தின் பெரும்பகுதிக் கிராமங்கள் மீண்டும் இடப்பெயர்வைச் சந்தித்தன. அதுபோல, ஜயசிக்குறுய் நடவடிக்கையால் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் கணிசமான தொகைக் கிராமங்கள் இடம்பெயர்ந்துள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும்பகுதிக் கிராமங்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில் இடம்பெயராத கிராமங்கள் என்று வடதமிழீழத்தில் – ஒரு சில ஊர்களை மட்டுமே குறிப்பிட்டுச் சொல்லமுடியும். அந்தளவுக்கு இடப்பெயர்வுச் சூறாவழியால் வடதமிழீழம் உலுக்கியெடுக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த இந்த மக்கள் உணவு நெருக்கடிகளாலும் - மருத்துவ பற்றாக்குறைகளாலும் மிகவும் துன்பப்படுகின்றனர். அடைமழை இந்த வாழ்வியல்துன்பத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. அரசின் பொருளாதாரத்தடையும் - மனிதாபிமானப் பொருட்கள் வந்துசேர்வதில் சிங்கள அரசு கடைப்பிடிக்கும் இனவாதப்போக்கும் இடம்பெயர்ந்த மக்களின் துயரத்தை இரட்டிப்பாக்கியுள்ளது.

தீவிரமான போர் ஒன்றிற்கு முகங்கொடுத்தபடி - புலிகள் இயக்கம் – தன்னால் முடிந்தளவுக்கு, இடம்பெயர்ந்த மக்களுக்கும், பல்வேறு வழிகளில் உதவி வருகின்றது.

## பேரினவாதத்தின் புதிய வியூகம்

முழுமையான முறையில் ஒரு போரை நடாத்திக்கொண்டிருக்கும் சந்திரிகா அம்மையாரை ஒரு இராணுவவாதியென்று சரியாக அழைப்பதற்குப் பதிலாக, சமாதானத்திற்காகப் பாடுபடும் ஒரு ஆட்சியாளர் என்று, மேற்குலக நாடுகள் தவறாக அழைக்கின்றன.

அம்மையாரின் சாதுரியச்செயற்பாடுகளும் – பேச்சுக்களும் அத்தகையதொரு தவறான புரிதலை, சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்தியுள்ளது. இனப்பிரச்சனை என்ற ஒன்றே இந்த நாட்டில் இல்லை என ஐ தே. க. அரசாங்கங்களின் கருத்திற்கு முரணாக,நாட்டில் இனப்பிரச்சனை உண்டு என்றும் தமிழ்மக்களுக்கு அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன என்றும் அம்மையார் அடிக்கடி கருத்துவெளியிடுவார். இதுபோல, தென்னாசியாவின் முதன்மை நூலகமான யாழ்நூலகத்தை தாம் எரிக்கவில்லையென்று ஐ. தே. கட்சித் தலைமை மறுதலித்துக் கொண்டிருக்க - ஐ. தே. க. அரசாங்கத்தின்உத்தரவின்பேரிலசிங்களப் பொலிசாரே எரித்தனர் என்றும் அம்மையார் குற்றம் சாட்டியிருந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, 17 வருட ஐ. தே. க. ஆட்சியில் வெளியிடப்படாத ஒரு 'அரசியல் தீர்வுத் திட்டத்தை' –தனது மூன்று வருட ஆட்சிக்காலத்தில் வெளியிட்டுவிட்டதாக தம்பட்டமும் அடிப்பார்.

ஒரு யதார்த்த பூர்வமான ஆட்சியாளராக அம்மையாரை சர்வதேசம் கருதியதற்கு மேற்குறித்த வகையில் அந்த அவரது வார்த்தைகளும் செயல்களும் முக்கிய காரணிகளாகும்.

எனினும், நீதிக்காகக் குரல்கொடுப்பது போல வாயால் கதைத்துக் கொண்டு ஐ. தே. கட்சி அரசாங்கத்தைவிட மிகக் குரூரமானவகையில் செயலில்ஈடுபட்டார்.

தமிழருக்கு இனப்பிரச்சனை உண்டு என்று கூறிய அம்மையார், அதைத் தீர்த்து வைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தும், அவர் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை.

1981 இல் அழிக்கப்பட்ட யாழ்நூலக எரிப்பை கண்டனம் செய்த அம்மையார், 1995 இல் யாழ்ப்பாணம் மீது குண்டுமழை பொழிய உத்தரவிட்டு யாழ்ப்பாண மக்களையே இடம்பெயர்ந்தோடச் செய்தார்.

உருப்படியான தீர்வுத்திட்டமொன்றை, தமிழ் மக்கள் எதிர்பார்த்துநிற்க – அம்மையார் அவர்களோ – தமிழரின் தேசிய அபிலாசைகளைக் கொன்று – புதைக்கும் சூழ்ச்சித்திட்டத்தைக் கொண்ட நிர்வாகமுறைமைகளை, அரசியல் தீர்வுத் திட்டம் என்று பெயர்சூட்டி வெளியிட்டார்.

சிங்கள - தமிழ் இனப்பிரச்சனையைக் கூர்மையடையச் செய்வித்தது ஐ. தே. கட்சி அரசாங்கம் தான் என்று சுட்டுவிரல் நீட்டிக்கொண்டு - தனது4வருட ஆட்சியில், இந்தத் தீவில் இரத்த ஆறு ஓடச்செய்தபடியுள்ளார். இனப்பிரச்சனையை படுமோசமான முறையில் இடியப்பச்சிக்கலாக்கியுள்ளார். 17 வருடகாலமாக ஐ. தே. கட்சி அரசு தமிழினத்திற்குச் செய்த கொடுமையை சந்திரிகா அரசாங்கம் 4 வருடத்தில் செய்துள்ளது.

தமிழ் மக்களை விடுவிக்க என்று கூறிக்கொண்டு– சமாதானத்திற்காக யுத்தம் என்று சொல்லிக்கொண்டும் தமிழ் மக்கள் மீது ஆக்கிரமிப்புப்போரைத் தொடுத்துள்ள அம்மையாரின் அரசாங்கம் தமிழர்களை அவர்களது சொந்த மண்ணிலேயே இன அழிப்புச் செய்துவருகின்றது. அழிவையும் – அவலத்தையும் வேரோடு பிடுங்கியெறியப் பாடுபடப்போகின்றேன் என்று பிரகடனம் செய்த அம்மையார், இன்று தமிழர் நிலத்தில் அழிவையும் – அவலத்தையுமே விதைத்து வருகின்றார்.

## சந்திரிகா அலையின் அந்திமம்

இதேவேளை அம்மையாரின் அரசாங்கத்திற்கு இருந்த முன்னைய சர்வதேச அங்கிகாரம், இப்போது மங்கத்தொடங்கியுள்ளது. சிங்களப் படைகளால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெறும் படையினரின் பாலியல் வல்லுறவுகளும் அவர்களால் கைதாகிக் காணாமல் போதலும் - மற்றும் விடுவிக்கப்பட்ட மக்களின் சோதனைச்சாவடி வாழ்க்கைப் பயணமும், அம்மையாரது ஆட்சியின் சுயரூபத்தை சர்வதேசத்திற்கு உணர்த்தியுள்ளன.

இந்தவகையில், சந்திரிகா அம்மையாரின் – உண்மைமுகத்தை– பேரினவாதக் குணத்தை சர்வதேசம் புரிந்துகொள்ள அடியெடுத்துக் கொடுத்த ஆண்டாக கடந்த போராண்டு திகழ்ந்துள்ளது. இந்த மாற்றம் புதிய ஆண்டில் ( 98 ) மேலும் வளர்ந்து தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் சர்வதேசச் சூழல் உருவாக வழியேற்படலாம்.

## தலைவரின் அரசியல் செய்தி

இதேவேளை, கடந்த போராண்டின் இறுதிப்பகுதியில் தலைவர் பிரபாகரன் விடுத்த அரசியல்செய்தி உலகின் மனச்சாட்சியை உறுத்தியிருக்கும். சந்திரிகா அரசு மட்டுமல்ல கடந்த 50 வருடங்களாக சிங்கள அரசாங்கங்கள் எவையுமே தமிழருக்கு நீதிவழங்க முனையவில்லை என்ற வரலாற்று உண்மையை அந்தச் செய்தியில் தலைவர் எடுத்து விளக்கியிருந்தார். இந்த உண்மையை புரிந்துகொள்ளாது இருந்துகொண்டு–சந்திரிகா அரசாங்கத்திற்கு உதவும் உலகநாடுகளின் அறியாமையையும் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், இறந்த வீரர்களின் புதைகுழிகளை உழுதெறிந்து – அழித்த சந்திரிகா அரசாங்கத்தின் ஈனச்செயலை தலைவர் அம்பலப்படுத்தியிருந்தார். காட்டுமிராண்டித்தனமான இந்த இழிசெயல் சந்திரிகா அம்மையாரின் தமிழினவெறியை உலகிற்கு புலப்படுத்தியிருக்கும்.

இவ்விதம், வாழ்வியல்ரீதியாக தமிழ் மக்கள் பெரும்துயைத்தை எதிர்கொண்ட போதும், போர்முனையிலும்சரி - அரசியல் அரங்கிலும் சரி சிங்கள அரசிற்கு, பாதகமானவகையிலேயே கடந்த போராண்டு கழிந்துள்ளது. கடந்த போராண்டில் கதாநாயக பாத்திரத்தை வகித்த வன்னிசமர், புதிய ஆண்டிலும் முதன்மை இடத்தை வகிக்கப்போகின்றது.

## 1997 இன் முக்கிய சண்டைகள்

- 09.01.97 பரந்தன் - ஆனையிறவு மீதான தாக்குதல்
- 13.05.97 ஜயசிக்குறுய் ஆரம்பம்
- 24.05.97 இறம்பைக்குளச் சண்டை (3 ராங்க் அழிப்பு)
- 10.06.97 தாண்டிக்குளம் மீதான தாக்குதல்
- 24.06.97 ஓமந்தை - பெரியமடு தாக்குதல்
- (சுமார் 3 மாதங்கள்) புளியங்குள சண்டைகள்
- 05.10.97 கரப்புக்குத்தி - விஞ்ஞானகுளம் தாக்குதல்
- 04.12.97 மன்னகுளம் சண்டை



www.eelamview.com

# 1998 ஆம் ஆண்டு: சில வாக்கு மூலங்களும் வருடப் பலனும்

98 ஆம் ஆண்டு நடைபயிலத் தொடங்கிவிட்டது; 21 ஆம் நூற்றாண்டு அண்மிக்கின்றது; புதிய நூற்றாண்டை எதிர்கொள்ள-வரவேற்க உலகம் ஆயத்தமாகின்றது. சிறிலங்கா என்ன செய்கின்றது? தமிழீழம் எங்கே போகின்றது? இந்த நூற்றாண்டின் பெரும் வினாக்கள் இவை. இவைபற்றி அம்மையார் என்ன சொல்கின்றார்? ''இதற்கு மேல் எதுவுக் செய்யமுடியாது என்கிற நிலையிலே இத்தீர்வுத்திட்டத்தை முன்வைத்தோம். இச்சந்தர்ப்பத்தை தவற விட்டால் நாடு அழிவதை யாராலும் தடுக்க முடியாது. எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சிக்கலைத் தீர்க்க முடியாது. ஏனெனில் இன்று இனச்சிக்கல் அகோரவடிவம் பெற்றுவிட்டது. இதனை இவ்வாண்டிற்குள் தீர்க்காவிட்டால் நாட்டிற்கு எதிர்காலமே கிடையாது. வடக்கிலும் தெற்கிலும் மோதல்கள் தலைவிரித்தாடி நாடே அராஜகத்துள் அமிழ்ந்து விடும். அப்போது நாம் எல்லோரும் கடலுக்குள் குதிக்க நேரிடும்.'' இங்கே அம்மையார் ''இதற்குமேல் எதுவும் செய்ய முடியாது என்கிற நிலையிலே'' என்பது தேக்க நிலையை அடைந்துள்ள ஜயசிக்குறுய் பற்றியதாகவும், ''நாடு, நாடு'' என அம்மையார் ஒப்பாரிவைப்பது சிங்களத்தையே குறிக்கும் என்பதும், நாம் என்பது சிங்களவரைக் குறிக்கும் என்பதுமே இந்த ஆண்டு, தமிழ் மக்கள் சார்பாக முன் வைக்கும் செய்தியாகப் போகின்றது என்றே நாம் பொருள்கொள்கின்றோம்.

இதேவேளை அரசியல்வாதிகள் தவிர்ந்த சிங்களத்தின் ஏனைய அறிஞர்கள், நற்சிந்தனையாளர், ஆய்வாளர் எல்லோரும் ஏகோபித்து என்ன சொல்கின்றார்கள்? இவர்கள் யாவரும் கூறும் கருத்தை சமூக, மதத்திற்கான மையத்தின் பணிப்பாளரான (Centre for Society and Religion) கலாநிதி துஸ்வால்ட் இவ்வாறு பிரதிபலிக்கின்றார்: ''50 வருட சுதந்திரம் எமக்கு அளித்த சுதந்திரம் என்ன? அவநம்பிக்கை, விரக்தி என்கிற கருமுகில்களே இத்தீவை இன்று சூழ்ந்துள்ளன. பாரிய சிக்கல்களின் குவிமையத்துள் தீவு உள்ளது. மாயைகள் நிரம்பிய கற்பனை உலகில், தீவு யதார்த்தத்திற்கு புறம்பாக வாழ்கின்றது. சிங்களவரிடையே மனமாற்றமின்றி எவ்வாறு இனச் சிக்கலுக்கு தீர்வுகாணமுடியும்? அது போலவே பொருண்மிய மேம்பாடு என்பதும் வெறும் மாயையே. தென்கிழக்கு, கிழக்காசிய நாடுகள் இன்று எமக்குச் சொல்லும் செய்தி இதுதான்: '' உலக வங்கி கூறுவது போல் மானியங்களை முற்றாக நீக்கி, பொதுநலச் செலவுகளை முற்றாகக் குறைத்து, போரை நிறுத்தி, மேலதிக தொழிலாளரை வேலை நீக்கி, வேதன உயர்வை நிறுத்தி செயற்பட சிறிலங்காவால் முடியுமா? விதைத்ததை தானே அறுக்க முடியும்.''

இக்கட்டத்தில் (ஓய்வுபெற்ற) விங் கொமாண்டர் மார்க் செனிவிரத்தினா, மிக்க அவலம் நிரம்பிய சிங்களத்தின் சித்திரம் ஒன்றை வரைகின்றார்: '' அரசியல் வாதிகளால் அரசியலும் போரும் ஏற்படுத்திய குருதி வெள்ளத்தில் சிங்களம் மிதக்கின்றது. இந்தோனேசியாவின் காட்டுத் தீயைவிடவும் வேகமாக வேலையின்மை பரவ, வாழ்க்கைச் செலவு விண்ணுக்கு எகிற, வேறு வழியின்றி தமது புதல்வர்களை வேதனத்திற்காக இராணுவத்தில் சேர்த்தவர்கள், அவர்கள் சமர்க்களங்களிலே சமாதியாவது கண்டு படும் துயரம் எல்லை தாண்டிவிட்டது. கண்ணீரை ஆறாகச் சொரியும் காலம் இப்போது சிறிலங்காவிற்கு வந்து விட்டது வெறுமனே அழுத காலம் போய் இப்போது விம்மி, விம்மி அழுது வெதும்பவேண்டிய காலம் வந்துவிட்டது (''Cry not SriLanka but weep'').

இப்போது சிறிலங்காவின் குடுகுடுப்பைக்காரரான பீரிஸ் என்ன சொல்கின்றார்? மெத்தவும் படித்த கனவானான பீரிஸ், விதி (?) வசத்தால் அம்மையாரின் அந்தரங்க ஆலோசகரானபின் பிதற்றி, அரற்றி 'நல்லகாலம் வருகுது' என இப்போது திரும்ப, திரும்ப குறி சொல்கின்றார். ''சிறிலங்காவின் வரலாற்றிலே இந்த ஆண்டே மிகத் தீர்க்கமான ஆண்டு. பெரும் திருப்பங்கள் ஏற்படப் போகும் ஆண்டு. பொதியை நிறைவேற்ற ரணில்



ஒத்துழைக்காவிட்டால் எம்மிடம் மாற்றுவழிகள் உள்ளன.....'' என பீரிஸ் தொடர்கின்றார். மனம் போன போக்கில் பேசித் திரியும் பீரிஸ் கூறும் ''மாற்று வழி'' தான் என்னவென்பதைத் தான் ஒரு முறை பார்த்து விடுவோமே! கடந்த வருடம் ஒக்டோபர் மாதமளவில் நாடாளுமன்றில் பீரிஸ் சமர்ப்பித்த அரசியல் யாப்பிற்கான திருத்தங்கள் பற்றிய பிரேரணைகளின் பின்னே பீரிஸ் இவ்வாறு புலம்பித்திரிகின்றார். ஆனால் இங்குள்ள மோசமான உண்மை என்னவென்றால், இத்திருத்தங்கள் தொடர்பாய் பின்வரும் விடயங்களில் எவ்வித கருத்தொருமைப்பாடும் எவரிடமும் ஏற்படவில்லை என்பதுதான். அதிகாரம் 1 குறிக்கும் அரச இறையாண்மை, மக்கள்; அதிகாரம் 15 குறிக்கும் பிரதேசங்களுக்கான அதிகாரப்பகிர்வு; அதிகாரம் 16 குறிக்கும் அரச நிலம்; மற்றும் அதிகாரம் 22, 23 குறிக்கும் தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு போன்ற விடயங்கள் தாம் அவை.

தீர்க்கமுடியாத இச் சிக்கலை ஒதுக்கிவிட்டு, எல்லோரையும் திசை திருப்ப இன்னொரு கண்கட்டு வித்தையை பீரிஸ் காட்டுகின்றார். அதுதான் அரசியல் யாப்பின் 86 ஆம் பிரிவினை பயன்படுத்தி எவரையும் கட்டுப்படுத்தாத பொதுமக்கள் வாக்கெடுப்பிற்கு பொதியை விடப் போகின்றோம்'' என்பது தான் அந்த வித்தை. அந்த 86 ஆம் பிரிவு என்ன சொல்கின்றது? '' 85 ஆம் பிரிவின் விதிகளுக்கு உட்பட்ட வகையில் சனாதிபதி தான் விரும்பினால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என தான் கருதும் விடயமொன்றை பொது மக்கள் வாக்கெடுப்பிற்கு விடமுடியும்.'' ஆனால் யாப்பிற்கு 85 ஆம் பிரிவு என்ன வரையறை செய்கின்றது? '' யாப்பிற்கான எத் திருத்தமும் நாடாளுமன்றின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெற்று பொதுமக்கள் தீர்ப்பிற்கு விடப்பட வேண்டும்'' என்கிறது. எனவே '' இந்தப் பழமும் புளிக்கும் '' என அரசியல் யாப்பை மிகக் கடுமையாக அம்மையார் இப்போது சாடுகின்றார். ஆனால் அதேவேளை, அதே அரசியல் யாப்பு வழங்கும் அளவற்ற அதிகாரங்களை பயன்படுத்தியே ஆழவும் செய்கின்றார். இப்போது புதிதாக பொதிக்கு '' மக்கள் ஆணையை'' பெறப்போகிறாராம்.

ஏற்கனவே 'அமைதியை உருவாக்க' பெற்ற மக்கள் ஆணைக்கு என்ன நடந்தது? அம்மையார் இவ்வாறு பரிதவிப்பது கண்டு 'கொடுப்புக்குள்' சிரிக்கின்றார் ரணில். அம்மையார் எடுக்கும் சகல முயற்சிகளையும் 'செக்மேற்' செய்து '' இந்தப் பூனையும் பால் குடிக்குமா '' என்றிருக்கும் ரணில, அம்மையர் எதனை, எவற்றை. எவ்வாறு கூறி பதவிக்கு வந்தாரோ அத்தனையையும் பிரயோகிக்க தயாராகின்றார். வரலாற்றின் நகை முரண் நாடகமிது.

இப்போது எமது கதை; புதிய வரலாறு படைக்கும் புலிகள் கதை. 1812 யூன் மாதம் ரஸ்யா மீது பாய்ந்த போது, இன்னும் 1 மாதத்திற்குள் மொஸ்கோவில் இருப்பேன் என்றானாம் நெப்போலியன். பின் 1½ நூற்றாண்டின் பின் 1941 யூனில் சோவியத்ரஸ்யா மீது படையெடுத்த கிட்லர் வருட முடிவிற்குள் மொஸ்கோ என் வசம் என நம்பினானாம். வரலாற்றின் செல்லாக்காசாகிவிட்ட இத்தகைய காலக்கெடுக்களோடு ரத்வத்தவின் புகழ் (?) மிக்க காலக்கெடுக்களையும் சேர்த்த பெருமை மட்டுமா புலிகளைச் சேரும் ? ஜயசிக்குறுயை அதன் மூல இலக்குகளிலிருந்து விலக்கி, அதனை இயக்குவோரின் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கி முடிவற்ற போர் நிலைமைக்குள் சிங்களத்தை தள்ளிவிட்ட, தமிழரின் விடுதலைப் போரின் தாக்கம் எப்படிப்பட்டது ? '' தாங்கொணாத அழுத்தம் '' இப்போது சிங்களத்தின் மேல் புலிகளால் பிரயோகிக்கப்படுகின்றது.

**வே. பாலகுமாரன்**

இத் '' தாங்கொணாத அழுத்தம் '' என்பதின் பொருள் என்னவென்பதை, தேசிய சமாதானப் பேரவைக்காக மார்க் ஆய்வு நிறுவனம் அண்மையில் வெளியிட்ட அதிர்ச்சியூட்டும் தகவல்கள் கூறுகின்றன: 1996 ஆம் ஆண்டு போருக்காக ஒதுக்கப்பட்டது 4600 கோடி. ஆனால் உண்மையில் போரின் நேரடி விளைவுகள் யாவற்றையும் உள்ளடக்கினால் இத்தொகை 16, 500 கோடி என்கின்றது மார்க். மொத்த தேசிய உற்பத்தியில் 21. 3 விழுக்காடு இது. கடந்த 14 வருட காலத்தில் போரினால் மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி 2, 34,000 கோடி (2340 பில்லியன் ரூபா). இது 1996 ஆம் ஆண்டு தேசிய உற்பத்தியான 76800 கோடியின் மும்மடங்கு. போர் நடத்திராவிட்டால் சிறிலங்காவின் பொருண்மியத் துறையே ஒட்டுமொத்தமாக 40 விழுக்காடு வளர்ச்சியைப் பெற்றிருக்கும். அதன் பொருண்மிய வளர்ச்சி வருடமொன்றிற்கு 7 விழுக்காட்டை நெருங்கியிருக்கும். (1996 ஆம் ஆண்டு வளர்ச்சி 4. 3 விழுக்காடு) சராசரி நபரின் வருமானம் 40 விழுக்காடால் அதிகரித்திருக்கும். வேலையின்மை என்பது தற்போதைய 12 விழுக்காட்டிலிருந்து 3 அல்லது 4 விழுக்காடாக குறைந்திருக்கும். இவ்வாறாக இப் புள்ளி விபரங்கள் போர் நிறுத்தப்பட்டால் எண்ணற்ற பாரிய நன்மைகள் கிடைக்கும் என ஏக்கம் தெரிவிக்கின்றது.

நம்பமுடியவில்லை என்கிறீர்களா? இறுதியாக இன்னொரு வாக்குமூலம். யாழ்ப்பாணத்தில் முன்னர் அரச அதிபராக இருந்து பின்னர் பல இராசதந்திரப் பணிகளில் ஈடுபட்ட நெவில் ஜெயவீரா கூறுகின்றார்: '' மிக விரைவிலோ அல்லது பின்னரோ வடகிழக்கில் வாழும் தமிழர்கள் சிறிலங்காவிலிருந்து முற்றாகப் பிரிந்தோ அல்லது பிரிவினைக்கு சமமான அளவு அதிகாரப் பகிர்வினையோ பெற்று விடுவார்கள். இது நடந்து ஒரு பத்தாண்டுக்குள் அல்லது அதற்கு குறைவான காலத்திலோ சிங்களவர் விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன வடகிழக்குப்பகுதி அரசியல், பொருண்மிய ரீதியில் மிக்க வலிமையுடைய, எழுச்சி பெற்ற பகுதியாகிவிடும்.'' (நெவில் இவ்வாறு கூறுவதன் நோக்கம் அதிகாரப்பகிர்வு சிங்களவர்க்கு இப்போது தேவையில்லை. தமிழர்க்கு மட்டுமே தேவை. அது சிங்களப் பகுதியை துண்டு துண்டாக்கி சேரழித்துவிடும் என்பதற்காக என்பது வேறுவிடயம்) ஆண்டுத் தொடக்கத்திலே இவ்விதமான பல இடித்துரைப்பு வாக்கு மூலங்கள் சிங்களத்தில் எழுகின்றன. இவற்றிலிருந்தே இந்த ஆண்டுப் பலன் எவ்வாறிருக்கும் என்பது நாம் ஊகிக்க கூடிய விடயமல்லவா. ○

# பகை சிலிர்க்கும் நெஞ்சுரம்!

கல்முனையில் பிரதான இடம்; பாடசாலை உபகரணங்களுக்கும் அலங்காரப் பொருட்களுக்கும் பேரானகடை. அந்தக் கடையை அண்மித்து, விசேட அதிரடிப் படையின் ஒரு 'ட்ரக்' வண்டி நின்று கொண்டிருக்கின்றது. நான்கு பக்கமும் மூடப் படாமல் திறந்திருந்தாலும் 'ட்ரக்' வண்டியின் ஒருபக்க இருக்கையில் அழுக்குத்துணி ஒன்றினால் போர்த்தியபடி – ஒரு முண்டம் அத்துணிக்குள் மறைந்திருப்பது, இதுவரைக்கும் எவருக்குமே தெரியவரவில்லை.

1985 ஆம் ஆண்டில் ஒரு நாள், காலை 7.00 மணியிலிருந்து இயக்க உறுப்பினர்களைத் தேடிக்கொண்டு, கடையருகில் வாகனத்தை நிறுத்திவிட்டு கடையினுள் சாதாரண உடையில் விசேட அதிரடிப்படையினர் பதினைந்து பேர்வரை மறைந்திருக்கின்றார்கள் என்பது மட்டும் உண்மை.

தேசத்துரோகியின் சொற்படி அதிரடிப் படையினர், தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட – கல்முனைப் பிராந்திய அமைப்பாளராக இருந்த விஸ்வத்தின் வரவை எதிர்பார்த்து இருக்கின்றார்கள் என்பது யாருக்குத்தான் தெரியும்?

விஸ்வம் – ஆம்! அவன் மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்தவன். தாய் இவன் சிறுவனாக இருக்கும்போதே இறந்துவிட்டாள். தந்தை, சகோதரர்கள் உண்டு. கண்டவர் மெய் மறந்து நிற்குமளவுக்கு ஓவியம் வரைவதில் இவனுக்கு நிகர் இவனே.

இவன் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலம் – 1976 ஆம் ஆண்டு – தன் வீட்டில் வைத்து தேசியத் தலைவரை அழகாக வரைந்து விட்டான். அன்று கல்முனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த எஸ். நவரெட்ணராஜா, இவனது பக்கத்து வீட்டிற்கு குற்றவாளி ஒருவரைப் பிடிக்கப் பொலிசாருடன் நடந்து வந்தபோது, இவன் வரைந்திருந்த தேசியத் தலைவரின் படம் அவனது கண்களில் தென்பட்டு, அப்படத்தை எடுத்துச் செல்லுமுன், படம் வரைந்த கருணாநிதியை (விஸ்வம்) பொலிஸ் நிலையம் வரும்படி கட்டளையிட்டு விட்டுச் செல்கின்றான்.

**க. குலேந்திரன்**

மறுநாள் கல்முனைப் பொலிஸ் நிலையம் சென்ற விஸ்வம், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நவரெட்ணராஜாவினால் எச்சரிக்கப்படுகின்றான். தான் ஓவியன் என்றும் தான் வரைந்த ஓவியங்கள் பல இடங்களில் இருப்பதாகவும், தினசரிப் பத்திரிகையொன்றில் வந்த இப்படத்தை வரைய நினைத்து வரைந்ததாகவும் எடுத்துக் கூறுகின்றான் விஸ்வம்; பின் வெளிவருகின்றான்.

அன்று இவன் ஓவியம் வரைந்தே தன் குடும்பத்தின் கஷ்டத்தைப் போக்கியவன். விடுதலைப் புலிகளில் டேவிட் ஐயா மூலம் இணைந்தான். காலை 7.00 மணியிலிருந்து 8.00 மணிவரையில் விடுதலைப் புலி ஆதரவாளர்கள், உறுப்பினர்களை கல்முனையில் உள்ள உணவகத்தில் சந்தித்து உரையாடிய பின்தான், ஏனைய கிராமங்களுக்குச் செல்வது இவனது அன்றாட வழக்கம்.

அன்று கல்முனைப் பொது நூலகத்தில் மட் – அம்பாறை அரசியல் பொறுப்பாளராக இருந்த கப்டன் பிரான்சிசை அழைத்து, கருத்தரங்குகள் மூலம் விளக்கம் கொடுப்பதும் புதிய உறுப்பினர்களை அழைத்து அவர்களுக்கு விளக்கமளிப்பதும் இவனது இடைவிடாத சேவைகளில் ஒன்று.

நாட்கள், மாதங்களையும் கடந்து வருடத்தையும் கடந்து கொண்டிருக்கின்றன.

இளைஞன் ஒருவனின் கழுத்தில் கறுப்பு அல்லது சிவப்பு நாடாவைக் கண்டால், அவன் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். பொத்துவில், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்குச் சென்று, அங்குள்ள பொறுப்பாளர்களிடம் ஆலோசனை கேட்பதும் வழக்கம்: அதுவும் பேருந்தில் இவனது பயணம் தொடரும்.

அன்றாடம் வாகனங்களையும் பிரதான பாதையூடாக வருவோரையும் விசேட அதிரடிப் படையினர் பிடித்துச் சோதிப்பது வழக்கம். இவன் மிகச் சாதுவானவனாகவும் இயக்கத்தைப் பற்றி தனக்கு எதுவுமே தெரியாது என்பவனைப் போலவும் தன் முகபாவங்களைக் காட்டியவனாக நடப்பான். அதிரடிப் படையினர் இவன் சந்தேகத்திற்குரியவன் எனப்பார்ப்பது இல்லை! ஆனால் எந்த நேரத்திலும் தான் எதிரியிடம் பிடிபடலாம்; அப்படிப் பிடிபட்டால் இயக்கத்தின் சட்டதிட்டப்படி சயனைட் அருந்தவும் தயங்காதவன். அதற்கேற்றாற் போல் டேவிட் ஐயா கொடுத்த சயனைட்டை தன் சேட் கொலரில் மறைத்து வைத்திருந்தான். அதனை எந்தச் சிரமமுமின்றி உபயோகப்படுத்தவும் வசதியாக அமைத்திருந்தான்.

1985 ஆம் ஆண்டில் ஒரு நாள் கல்முனைப் பிரதான பாதையில் அனைத்தும் வழமைபோல் நடைபெறுகின்றன. தொழிலாளர்கள், வியாபாரிகள் பாடசாலை மாணவ – மாணவிகள் தங்கள் தங்கள் அன்றாடச் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். அம்பாறை சென்றல் காம்ப்பிலிருந்து தனது அக்காவின் மகளைத் தன் சின்ன சைக்கிளில் ஏற்றி வந்து கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை முன் கேற்றடியில் இறக்கிவிட்டுச் செல்வான் விஸ்வம். ஆனால் அன்று சின்ன 'வான்' ஒன்றில் வந்து பாடசாலை முன் வாசலில் இறங்கிய விஸ்வம் நடந்து வருகிறான் – பாதையில் வரும் மக்களுடன் இவனது வரவை எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கின்றனர் விசேட அதிரடிப்படையினர். காட்டிக்கொடுப்பவனும் வீதியால் போவோர் வருவோர் மீது தன் பார்வையைச் செலுத்திக்கொண்டிருக்கிறான். விஸ்வத்தின் வழமையான நடை.

''அடோவ் நில்லடா''

எதிரிதான் அழைக்கிறான் என்பதைப் புரிந்துகொண்ட விஸ்வம், அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து நடக்கின்றான்.

மறுகணம் சாதாரண உடையில் இருந்த பதினைந்து விசேட அதிரடிப் படையினரும் விஸ்வத்தை சுற்றி வளைத்து கை, கால் துப்பாக்கிகளால் தாக்கத் தொடங்கினார்கள். வீறுகொண்ட வேங்கையல்லவா! அதுவும் தாக்கத் தொடங்கியது.

இவனது வலது கை, இவன் பாரிய வேலைகளைச் செய்தால் தோள்மூட்டில் இருந்து விலகிவிடுவது வழக்கம். இன்னொருவர் இவனது கையைப் பிடித்து உதவினால் சரியாகிவிடும்.

ஆனால் அந்த நிலை அதிரடிப்படையினரின் மத்தியில் இவனுக்கு ஏற்பட்டுவிட்டது. இவனுக்கு உதவ யாருள்ளார்? கல்முனை நகரில் இக்காட்சியை மக்கள் வெள்ளம் காண்கின்றது. இவனை வளைத்தவர் எதிரிகள். விஸ்வம் தன் காலால் எதிரியொருவனின் கையிலிருந்த துப்பாக்கிக்கு அடிக்கிறான். எதிரியின் கையிலிருந்த துப்பாக்கி மேலெழுந்து விழுகின்றது.

எதிரிகள் இவனது கால் கைகளில் பிடித்து அவர்களின் 'ட்றக்' வண்டியில் வீசி எறிந்து விடுகின்றார்கள். வாகனத்தினுள் விழுந்து, எழுந்த விஸ்வம் அங்கிருந்த முக மூடிக்காரனின் முகத்திரையைக் கிழித்து ''தங்கமணி! தங்கமணி? எதிரிக்கு என்னைக் காட்டிக் கொடுத்து விட்டான் தங்கமணி!'' என பல தடவைகள் உரத்த குரலில் சத்தமிடுகின்றான்.

விஸ்வத்தின் வீட்டிற்கு பின் வீடு தங்கமணியின் வீடு. இவன் அரசாங்க உத்தியோகத்தன். இவர்களின் பொது வேலியில் இவனது அக்காவிற்கும் தங்கமணிக்கும் ஏற்பட்ட வாய்ப்பேச்சில் குறுக்கிட்டுப் பிரச்சனையைத் தீர்த்தவன் விஸ்வம். ''நீ எல். ரி ரி. உன் அதிகாரத்தைக் காட்டுகிறாய்! ஆனால் நான் யாரென்றும் நீ அறிவாய்'' என அன்று கூறிய தங்கமணி தான், இன்று இப்படிப் பழிவாங்க வந்தானோ விஸ்வத்தை!

ஆத்திரம் கொண்டு வாகனத்தினுள் துள்ளிக் குதித்த அதிரடிப் படையினர், மீண்டும் தாக்கத் தொடங்கினர் விஸ்வத்தை. இவர்களின் பிடியில் இருந்து தப்பமுடியாது என உணர்ந்த விஸ்வம், தன் சேட் கொலரினுள் மறைத்து வைத்திருந்த சயனைட்டை உட்கொண்டு மான மறவர் போரில் மகிழ்ந்து மடியும் வேங்கை என்பதை வெளிக்காட்டுகின்றான்.



சயனைட் கடித்த விஸ்வத்தைக் கண்ட எதிரிகள், அவனது தொண்டையைப் பற்றிப் பிடிக்கின்றனர்: விஸ்வம் வென்று விட்டான்!

மறுகணம், எதிரியின் வாகனம் மின்னல் வேகத்தில் கல்முனை வைத்திய சாலையை எட்டியது ஆனால் விஸ்வத்தைக் காப்பாற்ற எதிரியினால் முடியவில்லை.

உயிரற்ற விஸ்வத்தின் உடல் மீது மீண்டும் எதிரிகள் தாக்குதலை ஆரம்பிக்கின்றனர். இறுதியில் கல்முனைப் பொலிஸ் நிலையத்தின் முன் சனத்திரள்.

தலைவிரி கோலத்துடன் அக்கா அழுது கொண்டு! உயிருக்காகப் போராடிக் கொண்டு நிற்கும் தந்தை! ''எங்கள் மகனின் பிணத்தையாவது தந்துவிடுங்கள்'' கெஞ்சிக் கேட்கிறார் விஸ்வத்தின் தந்தை. ஆத்திரத்துடன் இருந்த இன்ஸ்பெக்ரர் இரத்னாயக்க ''இவன் பயங்கரவாதி என்று கையொப்பமிட வேண்டும்: அத்தோடு ரூ 500/- கட்டி பிரேதத்தை எடுத்துக்கொண்டு போக வேண்டும்'' எனக் கட்டளையிடுகின்றான் உரத்த குரலில்!

அன்றாடம் ஒருவேளைச் சாப்பாட்டுக்கே வழியின்றிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த விஸ்வத்தின் தந்தையோ, சகோதரியோ ரூ 500/-க்கு எங்கே போவார்கள்? ''அட கொலைகாரப் பாவிகள்! ஒரு விஸ்வம் தான் இன்று செத்தான். ஆனால் நூறு விஸ்வங்கள் பிறந்து, உன்னையும் உன் கூட்டத்தையும் இந்தப் பொலிஸ் நிலையத்தையும் தரை மட்டமாக்கத்தான் போகிறார்கள் – அதை நான் இறப்பதற்கு முன் காணத்தான் போகிறேன்!'' என்று அன்று கல்முனைப் பொலிஸ் நிலைய முன் வாசலில் கையால் அடித்து அவர் சத்தியம் செய்தார் – அது, 1990.06.11 ஆம் திகதி நிறைவேறியது; விடுதலைப் புலிப் போராளிகளால்!

ஆம். அந்தக் களம் வென்ற வேங்கை விஸ்வத்தின் உயிரற்ற உடல், கல்முனைப் பொலிஸ் நிலையத்தின் பின்னால் ரயருடன் சேர்ந்து எரிந்துகொண்டிருந்தது– அந்தப் புகை மண்டலம் சூரிய ஒளியையும் மறைத்து அன்று பகல் 10.30 மணிக்கு கல்முனை நகரையே இருளாக்கியது. ஆனால் அவன் எரிந்த இடத்தில் 1990.06.11 ஆம் திகதி, விடுதலைப் புலிப் போராளிகள், மேஜர் கஸ்ரோவின் தலைமையில் இரண்டு நிமிட நேரம் விஸ்வத்திற்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

*கல்முனைச் சந்தியில் நீ!*
*கடமையில் நிற்கும் போது*
*பொல்லாத நரி எட்டப்பன்*
*போர்வைக்குள் வந்தான் - உன்னை*
*நில்லென்றார் பிடித்திழுத்தார்*
*நிமிர்ந்தவன் போர்வை பிய்த்தாய்!*
*கல்லொத்த உனது தோளால்*
*கயவர்களை அடித்து வீழ்த்தி*
*எல்லோருக்கும் வீரம் காட்டி*
*இறவாது புகழ் படைத்தாய்.*



www.eelamview.com

# ‘ஒப்பறேசன் ஜயசிக்குறுய்:’

# பார்பறோசாவை நினைவூட்டுகின்றதா!?

**கிட்லரின் படைகள் சோவியத்யூனியன்மீது நடாத்திய ஒரு ஆக்கிரமிப்புச் சமர்பற்றி இங்கே தரப்பட்டுள்ளது. பார்பறோசா என்று பெயரிடப் பட்ட அந்த நடவடிக்கை, இறுதியில் சோவியத் படைகளால் முறியடிக் கப்பட்டது. இந்தச் சமரின்தோல்வி போர்த்தோல்வியாக ஜேர்மனிக்கு அமைந்துவிட்டது. இந்தச் சமரையும் அது தொடர்பான கருத்துக்களையும் பார்க்கும்போது ஜயசிக்குறுய் சமர் நினைவுக்கு வருவதை தவிர்க்க முடியாதுள்ளது. கட்டுரை இரு சமர்களையும் ஒப்பிட்டு எழுதப்படவில்லை. ஆனால் வாசிப்போர் தமது மனதில் இரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்துச் சிந்திக்கக் கூடியதாக இருக்கும்.**

இரண்டாம் உலகப்போர் கண்ட பல நூறு சமர்களில்மிகப்பெரியது ‘ஒப்பறேசன் பார்பறோசா’ ‘சோவியத்தின் பலத்தை அழித்தல்’ என்பது பார்பறோசாவின் இலட்சியம். நடவடிக்கையின் குறியிலக்காக மூன்று பிரதான நகரங்கள் இருந்தன. (1) மொஸ்கோ (2) ஸ்டாலின் கிராட் (3)கில் என்கின்ற கைத்தொழில் கனிவளப் பிராந்தியம் உட்பட லெனின் கிராட். இம் மூன்று இலக்குகளும் வீழ்ச்சியுற்றால் சோவியத் காலடியில் வரும் என்பது கிட்லரின் கணிப்பு.

“பார்பறோசா” நடவடிக்கையின் போது சோவியத்தின் 155 டிவிசன் படைகளை எதிர் கொள்ளவேண்டிவரும் என்றும், அதே அளவு ஜேர்மன் டிவிசன்களையும் பயன் படுத்த வேண்டும் என்றும் நாசித் தளபதிகள் திட்டமிட்டனர். பதினையாயிரம் ஆட்களைக் கொண்டது ஒரு டிவிசன்.

போர் ஆற்றலைப் பொறுத்தவகையில் சோவியத் படைகள் தரம் குறைந்தவை என்றும், ஆட்பலம் மற்றும் ஆயுதவளத்திலும் அது பலவீனமாகவே இருக்கின்றது என்றும் ஜேர்மனியர் கருதினர். இதனால் ஜேர்மனியப்படைக்கு வெற்றி நிச்சயம் என நம்பினர். ‘பார்பறோசா’ தொடங்கப்பட்டதும் உலகம் மூச்சைப் பிடித்துக் கொண்டு - விக்கித்து நிற்கும் என்று கிட்லர் கூறியிருந்தார்.

ரஸ்யாவின் பேய்க்குளிருக்கு முன்னர் நடவடிக்கையை முடிக்க கிட்லர் எண்ணினார். அதனால் மே மாதம் சமரைத் தொடங்க திட்டமிட்டார். ஆனால், நாசிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யூகோசிலவாக்கியாவின் பொம்மை ஆட்சி, சதிப்புரட்சி ஒன்றில் கவிழ்க்கப்பட்டதால் அதற்குப் பழிவாங்க கிட்லர் முடிவெடுத்தார். பார்பறோசாவுக்கு ஒதுக்கிய படைபலத்தின் ஒரு பகுதியை யூகோசிலவாக்கிய தலைநகரான ‘சேக்’ கிற்கு அனுப்பினார். ‘சேக்’ துவம்சம் செய்யப்பட்டது. பதின்மூவாயிரம் நகரவாசிகள் மூன்று நாட்களில் கொல்லப்பட்டனர். ஒப்பறேசன் புனிஸ்மென்ற் என்று இதை கிட்லர் அழைத்தார். இந்தப் பழிவாங்கும் தாக்குதலால் நான்குவார காலதாமதம், பார்பறோசாவுக்கு ஏற்பட்டது.

1941 யூன் 22 ஆம் நாள் பார்பறோசா தொடங்கியது. பார்பறோசாவின் பிரதான சமர்த்தந்திரம் வேகமான படைநகர்த்தல். இதன் குறி இலக்கு நகரங்கள் 600 மைல் தொலைவில் இருந்தன. 6மாதத்தில் நடவடிக்கை பூர்த்தியாக்கப்படவேண்டும் என்று கிட்லர் உத்தரவிட்டார்.

புயல்போல் ஜேர்மன் படைகள் ரஸ்யாவிற்குள் நுழைந்தன. பால்டிக் பிராந்தியத்தில் இருந்து கருங்கடல் வரையான 1000 மைல் நீளக் களத்தை பார்பறோசா கொண்டிருந்தது. முதற் சிலநாட் சண்டைகளில் பலபத்தாயிரம் சோவியத்துருப்புக்கள் சுற்றிவளைக்கப்பட்டு – அழிக்கப்பட்டன. ஜேர்மனியின் கவசப்படையணிகள் எதிர்ப்புக்களை சுக்குநூறாக்கிக்கொண்டு- குறி இலக்குகளை நோக்கி – மரதனோட்டத்தில் பாய்ந்து சென்றன. மூன்று வாரத்தில் 450 மைல் தூரம் உள்ளே நுழைந்துவிட்டன.

திட்டமிட்டபடியே பார்பறோசாவின் ஒரு அணி மொஸ்கோவுக்கு 20 மைல் தூரத்தில் போய் நிலைகொண்டது. அதுபோல ஸ்டாலின் கிராட்டிற்கு அருகிலும் போய் நின்றது அதே சமயம் ‘கீவ்’ பிரதேசத்தைக் கைப்பற்றி – அங்கிருந்து லெனின்கிராட் நோக்கி முன்னேறியது.

நடவடிக்கை தொடங்கிய நான்காம் மாத நிறைவில் கிட்லர் தனது நாட்டுமக்களுக்கு உரையாற்றினார். “சோவியத் வீழ்ச்சியடைகின்றது. இனிமேல் ஒருபொழுதும் அது எழமாட்டாது. இதைநான் உறுதியாகப் பிரகடனப்படுத்துகின்றேன்” என்றார். நெப்போலியனால் முடியாததை, 7 ஆம் சார்ள்ஸ் மன்னனால் முடியாததை கிட்லர் சாதித்துக் காட்டப்போகின்றார் என்று உலகம் எதிர்பார்த்தது. வரலாற்றில் முதற்தடவையாக, ரஸ்யநாடு வேற்று நாடொன்றினால் ஆக்கிரமிக்கப்படப்போகின்றது என்று உலகம் கருதியது.

புயல்வேகத்தாக்குதல்களால், ஆரம்பத்தில் திகைத்து – நிறைய சோவியத் சேனைகள் படிப்படியாக தம்மை நிதானப்படுத்தி – எதிர்த்தாக்குதல்களுக்குத் தயாராகின. ஜேர்மனியப் படைகளின் குறி இலக்குகளை அடையாளம்கண்ட சோவியத் தலைவர் யோசப் ஸ்டாலின் எதிர்த்தாக்குதலுக்காக தனது அரசின் படைகளை தயார்ப்படுத்தினார். பரந்து – விரிந்த சோவியத் மண்ணில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனது படைகளை ஒருங்கிணைத்தார். அவ்விதம் பின்வாங்கிய நிலப் பரப்பில் இருந்து தொழிற்சாலைகளை கழற்றி இடம்மாற்றினார். இடம்மாற்ற முடியாதவற்றை அழித்தார். எதிரியின் கையில் விழும் எனக் கருதப்பட்ட எண்ணெய் வயல்களையும் – உணவுப் பொருட்களையும் அழித்தார். இராணுவரீதியான அனுகூலங்களாக ஜேர்மனியப் படைக்கு அமையக்கூடிய எதுவுமே ஜேர்மனியப் படைகளுக்கு கிடைக்கவிடக்கூடாது என்பதில் ஸ்டாலின் கவனமாக இருந்தார். இதை ஜேர்மனியப்படைகள் எதிர்பார்க்கவில்லை. கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இருந்து தேவையானவற்றைப் பெற்று சண்டைகளைத் தொடர்வது என்ற நாசிபபடைகளின் திட்டம் தவிடு பொடியானது.

சோவியத்தின் மையப்பகுதிகளை நோக்கி தனது படைகளை ஸ்டாலின் உள்ளிழுத்தார். ரஸ்யாவின் காவல்தெய்வமான குளிர்காலம் வரும்வரை சமரை இழுத்தடித்தார். அதேசமயம், புதிதாக ஆட்களைத்திரட்டி பெரும் படையணிகளை உருவாக்கினார். குளிர்காலச் சண்டைகளுக்கென தனது படைகளுக்கு பயிற்சிகளை

> **பார்பறோசா படைநடவடிக்கையில் ஜேர்மன் படை சந்தித்த இழப்பு (சாவு - காயம்) பத்து இலட்சம். இது ஜேர்மனியின் மொத்த படைபலத்தில் 31 வீதம். ஏறக்குறைய 30 மாதங்கள் இந்த நடவடிக்கை நடந்தது.**

யும் – உபசாரங்களையும் வழங்கினார். டிசம்பர் மாதம் பிறந்தது. குளிர்காலம் ஆரம்பமானது. பனி விழுந்து நகரெல்லாம் பனிக்காடாகியது. இந்த பனிக்காட்டினுள் கிட்லரின் நம்பிக்கை நட்சத்திரமான கவசப்படையணி செயல் இழந்து சிக்கியது.

எதிரிப்படை குளிரில் நடுங்கியபடி இருக்க, சோவியத்படைகள் தாக்குதலுக்குத் தயாராகின. டிசம்பர் 6ஆம் திகதி சோவியத் தளபதி சுக்கோவ் தலைமையில் பாரிய எதிர்த் தாக்குதல்கள் தொடங்கின. சிறந்த பயிற்சியும் - சக்திமிக்க ஆயுதங்களையும் கொண்டிருந்த 100 டிவிசன்கள் தாக்குதலில் இறங்கின. சோவியத்தின் ரி - 34 ரக ராங்குகள் பனிப்படலங்கள் மீது வழுக்கி வந்தன. ஜேர்மனி ஏவிய ராங்க் எதிர்ப்புக் குண்டுகளால் ரி 34 இன் கவசப் பாதுகாப்பை உடைக்க முடியவில்லை. கிட்லர் கருதியதுபோல பலவீனமான படைக்கலங்களுடன் - பயந்தவர்களாக சோவியத்படையினர் களம்புகவில்லை. சுற்றிவளைக்கப்பட்ட நிலையிலும் சோவியத்படையினர் வீரத்துடன் போராடினர் என்றார் ஒரு ஜேர்மன் தளபதி சோவியத்தின் பலத்தை நாங்கள் குறைந்து மதிப்பிட்டு விட்டோம் என்றார் பார்பறோசாவுக்கு தலைமை தாங்கிய ஜேர்மன் தளபதி. சண்டையில் அழியும் ஒவ்வொரு சோவியத் டிவிசனுக்குப் பதிலாக புதியவற்றை - ஒழுங்காக - களமனுப்பிக்கொண்டிருந்தனர் என்று இன்னொரு ஜேர்மன் தளபதி வியந்திருந்தார். ஸ்டாலின் தலைமை, மக்கள் ஆதரவில்லாத ஒரு ஆட்சி என்றே கிட்லர் நம்பினார். இதனால் ஸ்டாலின் அரசை ஒரு காகித வீடு என்றே அவர் கணித்தார். தனது படைத் தளபதிகளிடம் “நாங்கள் கதவுமீது ஒரு உதை உதைக்க வேண்டியது தான் உளுத்துப்போன கட்டுமானம் பொலபொலவென விழும்” என்றார்.

எதிர்த்தாக்குதல்களைச் சமாளிக்கமுடியாது திணறிக்கொண்டிருந்த பார்பறோசாத் தளபதிகளை நோக்கி கிட்லர் காலக்கெடுக்களை விதித்தார். 10நாட்களுக்குள் கிறெம்ளினை (மொஸ்கோ) பிடி என்று ஆணையிட்டார். சோவியத் படைகளைச் சுற்றிவளைத்து-தோற்கடித்து துடைத்தெறி என்று கட்டளையிட்டார். ஆனால், பின்வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்று நாசிகளின் களமுனைத் தளபதிகள் பதிலளித்தனர். இவர்கள் மீது கிட்லர் பாய்ந்தார். இவர்களை நீக்கிவிட்டு புதியவர்களை நியமித்தார்.

பார்பறோசா இராணுவநடவடிக்கையை கிட்லர் தனது தனிப்பட்ட கௌரவப் பிரச்சனையாகப் பார்த்தார். 1942 கோடைகாலத்தில் ஜேர்மன் அணிகள் புதியதொரு தாக்குதலுக்குத் தயாராகின. பார்பறோசாவிற்கு என்று அனுப்பிய 162 டிவிசன்களில் எட்டு டிவிசன்கள் மட்டுமே இந்த புதிய தாக்குதலுக்குத் தயாராகின. மற்றையவை அழிந்து சிதைந்துவிட்டன.

இன்னும் 3 வாரத்தில் ஸ்டாலின் கிராட்டை பிடித்துவிடுவோம் என அதற்குரிய ஜேர்மன் தளபதி அறிவித்தார் ஸ்டாலின் கிராட்டைப் பிடித்த பின்னர் அங்கிருந்து- எங்கு முன்னேறுவது என்பது பற்றிய பணிப்புரைகளையும் கிட்லர் வழங்கிவிட்டார். ஆனால் பிடித்துவிடுவோம் என்று உறுதி கூறிய ஜேர்மன்படை சுற்றிவளைக்கப்படும் அபாயம் எழுந்தது. பின்வாங்கவிரும்புகின்றோம் என்று அதே ஜேர்மன் தளபதி கிட்லரிடம் அனுமதி கேட்டார். பின்வாங்குவது என்ற சொல் இராணுவ அகராதியில் இல்லை என்று கிட்லர் பிடிவாதமாக இருந்தார். இதனால் கிட்லரின் படை அழிவைச் சந்தித்தது.

ஸ்டாலின் கிராட்டிற்கு அருகே நின்றிருந்த ஜேர்மனியின் 6 வது படைப்பிரிவை சரணடையும்படி செஞ்சேனை கேட்டது. ஜேர்மன் படை மறுத்தது. 1943 ஜனவரி 10 ஆம் திகதி சுமார் இரண்டு இலட்சம் ஆட்தொகையைக் கொண்ட அந்த ஜேர்மன் படைப்பிரிவுமீது பீரங்கிமழை பொழியப்பட்டது. சோவியத்தின் ஐயாயிரம் ஆட்டிலறிகள் இந்த தாக்குதலை மேற்கொண்டன. இந்த 6வது படைப்பிரிவை சரணடைய வேண்டாம் என்று கட்டளையிட்டுவிட்டு அதன் தளபதிக்கும் வேறு இருபதுபேருக்கும் பதவிஉயர்வுகளை, கிட்லர் வானொலிமூலம் வழங்கினார். அதன் தளபதியாக பதவி வகித்த ஜெனரல் பௌலஸ் என்பவருக்கு பீல்ட்மார்சல் பட்டத்தை கிட்லர் வழங்கினார். பட்டமளிப்புடன் கூடவே ஒரு செய்தியையும் அனுப்பினார், ஜேர்மன் வரலாற்றில் ஒரு பீல்ட்மார்சல் எதிரியிடம் உயிருடன் பிடிபடவில்லை என்னும் குறிப்பு அனுப்பினார். [மிகவும் வீரமாகப்போரிட்ட இந்த ஜேர்மன் தளபதி இறுதியில் சோவியத் படைகளால் உயிருடன் பிடிக்கப்பட்டு - போர் முடிந்ததும் விடுதலை செய்யப்பட்டிருந்தார்].

ஒப்பறேசன் பார்பறோசா அனைத்து முனைகளிலும் தோல்விகண்டது. இச் சமரில் ஜேர்மனிக்கு ஏற்பட்ட ஆள் இழப்பு பத்து இலட்சம். இது ஜேர்மனியின் மொத்த படையின் ஆட்பலத்தில் 31 வீதம் .1943 ஜனவரி 30ஆம் திகதி ஸ்டாலின்கிராட் சண்டைமுடிந்தது. 1944 ஜன.27 இல் லெனின் கிராட் முற்றுகையும் முடிவுக்கு வந்தது. அத்துடன் பார்பறோசா முடிந்தது. மொத்தம் 31 மாதங்கள் பார்பறோசா நடவடிக்கை நடந்தது. பார்பறோசா தோல்வியுடன் இரண்டாம் உலகப்போரின் மூக்கணாங்கயிறு நேசநாடுகளின் அணியிடம் சென்றுவிட்டது.

ஒப்பறேசன் பார்பறோசா தொடங்கப்பட்டவுடன், உலகம் மூச்சைப்பிடித்துக் கொண்டு - விக்கித்து நிற்கும் என்று வாயடித்த கிட்லர், பார்பறோசா முடிவின் விளைவுகளால் தனது மூச்சையே நிறுத்தி-தற்கொலை செய்துகொண்டார்.

ஸ்டாலின் தலைமையில் பார்பறோசா நடவடிக்கைக்கு எதிராக சோவியத் மக்கள் நடாத்திய வீரம்செறிந்த எதிர்ப்புப் போராட்டம் உலக வரலாற்றில் பொறிக்கப்பட்டுவிட்டது. ஆக்கிரமிப்பை அனுமதிப்பதில்லை என்ற ஸ்டாலினின் உறுதியான நிலைப்பாடும் - சோவியத் குடிமக்கள் தம்மை முழுமையான போர்வீரர்களாக ஆக்கிக்கொண்டதும் மற்றும் சோவியத்தின் காலநிலையும் அவர்களுக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தது. O



www.eelamview.com

# ஊரழிப்பு

மன்னம்பிட்டி ஒரு சிறிய கிராமம். பொலநறுவை மாவட்டத்தின் எல்லையோடு அது அமைந்துள்ளது. பிரதான வீதியில் ஒரு பக்கம் சிங்களக் கிராமத்தையும், அடுத்த பக்கம் ஒரு முஸ்லிம் கிராமத்தையும் கொண்டிருந்த தமிழ் ஊர் அது. 1992ஆம் ஆண்டின் துவக்கப் பகுதியில் ஓர் இரவு. சனங்கள் உறங்கினார்களோ இல்லையோ ஊர் பேச்சுமூச்சற்றுக் கிடந்தது. சிங்கள – முஸ்லிம் காடையர்களோடு இராணுவத்தினர் இரு பக்கங்களாலும் நுழைந்தனர். துப்பாக்கிகளைவிட அவர்களுக்கு அதிகம் பிடித்தமான கத்திகள், பொல்லுகள், வாள்கள், அலவாங்குகள் கைகளில் கிடந்தன. நாய்களின் வெறித்தனமான குரைப்பு ஊரைத் துடித்தெழச் செய்தது.

அன்று நடந்த கோரத்தின் அதிர்ச்சியிலிருந்து இன்றும் மீளாத ஒரு சிறுவன் எரிந்து சாம்பரான அந்த இரவின் கதையைச் சொன்னான்.

தாய்மாரைக் கட்டிப்பிடித்தபடி ஆழ்ந்து தூங்கிய பச்சிளங் குழந்தைகளை, கால்களில் பிடித்து பிடுங்கி இழுத்தார்கள். பதறி எழுந்து "ஐயோ!— என் குழந்தை—…" அன்னை சொல்லி முடிக்குமுன், வீறிட்டுக்கத்திய மழலையின் பிஞ்சுமுகத்தைச் சுவரோடு ஓங்கி அறைந்து, தெறடித்து "இந்தா …. பிடி—…" எனத் தாயின் மடியில் எறிந்துவிட்டுப் போனார்கள்.



மூன்றுநாட்கள் நரவேட்டைக்குப் பிறகு வயல்கள், வீடுகள், குடிசைகள், ஆலயம்' பாடசாலை என – அந்தச் சின்னக் கிராமம் முற்றிலுமாகக் கருகிப்போய்க் கிடந்தது. மனித சஞ்சாரமே அற்று மன்னம்பிட்டி வெறிச்சோடிப் போயிருந்தது. வீதிகளில் இழுபட்ட பிணங்களை நாய்கள் நரிகளோடு, பறவைகளும் உணவாக்கின. துல்லியமான புள்ளிவிபரங்கள் இல்லையாயினும், கொல்லப்பட்டவர்களது தொகை 250 இற்கு அதிகம் என்பது பிழைக்காது. இத்தொகை 450 - 500 வரைகூட இருக்கலாம். 1500 குடும்பங்கள் வரை வாழ்ந்த அந்தக் கிராமத்தின் அத்தனை குடிகளும் விரட்டியடிக்கப்பட்டன.



கணவனை இழுத்து பெற்றோலைத் தலையில் ஊற்றித் தீப்பெட்டியைத் தட்டியபோது, "ஐயோ அவரை விடுங்கோ…" எனக் கதறியோடிவந்து கட்டிப்பிடித்த துணைவியையும் சேர்த்துக்கட்டி, "நீயும் அவரோடயே போ… " என்று தீ மூட்டிய வெறியர்கள், மரண ஓலமிட்டு - துடித்துத் துடித்து மெல்ல அடங்கி கருகி முடியும்வரை கும்மாளமிட்டுச் சிரித்தார்கள்.

பயந்தொடுங்கி, பெற்றோருக்கிடையில் பதுங்கி ஒளித்த பெண்பிள்ளைகளை வெளியில் இழுத்தார்கள். பெற்றவர்கள் நிற்கவே, உடைகளைக் கிழித்தெறிந்தார்கள். உடல் சோர்ந்து, உணர்வு சோர்ந்து, உயிர் சோர்ந்து சாகும்வரை அவர்கள் மீது காமவெறியாடிய காடையர் கூட்டம் - போகும்போது - பிள்ளைகளின் பிணத்தைத் தூக்கிப் பெற்றவர்களின் கையில் கொடுத்துவிட்டு, எக்காளச் சிரிப்போடு வெளியேறியது.

பாடசாலையின் தளபாடங்களை முஸ்லிம், சிங்கள அயல் கிராமங்கள் பங்கிட்டுக் கொண்டன. வீடுகளை உடைத்து கதவுகள், சாளரங்கள், ஓடுகளைச் சேதாரமில்லாமல் கழற்றி பத்திரமாக எடுத்து, பக்கத்துக் கிராம வீடுகளுக்காக வாகனங்கள் ஏற்றிச் சென்றன. மேனி உருக்கிச் சேனை செய்து எம்மக்கள் சேர்த்து வைத்த நெல்மூடைகள், உழவு இயந்திரத்தொடுப்பிகளில் அடக்கி அப்புறப்படுத்தப்பட்டன. கொண்டுசெல்ல வசதியற்று எஞ்சிய பொருட்கள் எல்லாம் நெருப்புக்குக் கொடுக்கப்பட்டன. அறுவடைக்குத் தயாராயிருந்த வயல்களின் வரம்புகளைத் தாண்டிக்கடந்த படைவண்டிகள், குடடித்து விட்டுப்போயின.

பரிபூரணமான ஒரு ஊரழிப்பு நடந்து முடிந்தது. ○



## இறகுகள் முளைத்தெழ சிறகுகள் கிளரும்!

உயிர் உருவும்
ஓர் இரும்புத் துண்டு
ஊடுருவிய பொத்தல் வழி
உன் உயிர்க்குருவி பறந்தது.

விடுதலைக் குருவியின்
சிறகிலொரு இறகாய்
முளைத்தாய் நீ!

தேராவில் துயிலுமில்லத்
தரையின் ஒரு குழியினுள்ளே
துயிலுமென் திருமகனே!

பிஞ்சாய் நீயிருந்த போதிலுன்
செம்பஞ்சுப் பாதமென்
நெஞ்சுதைத்த மென்னுணர்வு
நெஞ்சைப் பிசைகிறது.
வாயிதழில் வீணீர் வடிய
தோளோடு நீ துயின்ற காலங்கள்
மனசுக்குள் பிசுபிசுக்கின்றன.

வானெழுந்து சடைத்தடர்ந்த காட்டினிடை
உலுப்புகின்ற போர்ப்புரவி தனிலேறி
சதிராடும் உன்னுயிரை மடியேந்தி
திறந்தவெளிச் சிறைநடுவே
துயர்ப்பளுவைச் சுமந்திருந்தேன்.

என் குருதிக் கொடியினிலே
பூத்த என் குருதிப் பூ
உயிரொழுகி உதிர்ந்ததெனும்
கொடியவான் என் மடியில்
செருகிநின்று ஆடியதே!

தலையிலடித்து
நெஞ்சிலறைந்து
ஓவென்று அலறி
உயிர்கருக்கும் வலி கரைய
அழுவதற்குக் குரலெடுத்தால்
குரல்வளையில் பல்லழுத்தும்
சிங்களத்துச்சேனைகளும் சிறைநிலத்தில்
துயர் விழுங்கி நான் புழுங்கினேன்.

நான் வடித்த சிலையுடலை!
ஊனுருக்கி உயிரெரித்த திருமெழுகை!
ஐயோ என் மகனே
என்றணைத்து அழுவதற்கும்
மண்ணிலொரு பிடியள்ளி
மனக்குழியில் உன்னைப் புதைப்பதற்கும்
கொடுப்பினையோர் துளியுமில்லாப் பாவி என்
ஆவி பற்றி எரிகிறது.

என் கட்டை இருக்க
நான் கொள்ளியிடும் கட்டையின்னும் இருக்க
நீ குழியில் நீடுதுயில்.

கொள்ளிப்பிள்ளை மூட்டுகின்ற தீயெரித்து
கட்டை வெந்து நீறாகும்
மூப்பின் கனவழியும் காலமிது!

வருங்குருத்து வாழவென
குருத்தோலை விழுகிறது.
குருத்தோலை விழுகுதென
காவோலை அழுகிறது.

எஸ். உமாஜிப்ரான் ○



www.eelamview.com

# காற்றுக்குப் பொன்னாடை
# முகில்களுக்கு மூக்குத்தி
# ஒப்பனையின் ஒய்யாரம் வெகுநேர்த்தி

*வேணிச்சங்கரர் தொண்டர்களென்று*
*வீடுதோறும் இரப்பவர்க் கெல்லாம்*
*மாணிக்கமன்னிப் பிச்சைகொடுத்திடும்*
*மாவலிகங்கை நாடெங்கள் நாடே.*

*துங்கமேதி சுறாக்களைச் சீற*
*சுறாக்களோடிப் பலாக்கனி கீறியே*
*இஞ்சிவேலியில் மஞ்சளிற் போய்விழும்*
*ஈழமண்டல நாடெங்கள் நாடே.*

இப்படித்தான் எத்தனை வடிவாய்
ஈழத்தமிழ்ப் புலவோர்கள் இலங்கையைப் பாடினர்.
சிங்களக் கவிகளே சொல்லாத அழகாய்
செந்தமிழ்ப் புலவர்கள் செப்பினர்.
எல்லாம் கனவாய்,
எல்லாமே கற்பனையாய்,
மெல்ல, மெல்லக்கரைந்து முழுதும் தொலைந்தது காண்.
சிங்கமணித் தீவுக்கு
4 – 2 – 1998 அன்று
தங்கமணித் திருவிழா.
வெள்ளைக்காரனிடமிருந்து விடுதலைபெற்று
அன்று ஐம்பது வருடங்கள் ஆகிறதாம்.
பொன்விழாப் பூரிப்பில் ''லங்கா'' பூத்துக்கிடக்கிறதாம்.
காலில்மாட்டிய விலங்குகள் கழன்டு
சிங்கபுரி பாலிற்குளித்த நாள்.
தோளிற்பூட்டிய நுகத்தடி முறிந்து
''நாயக்க வம்சம்'' நிமிர்ந்து நடந்தநாள்.
தொண்டுசெய்திருந்த தொலைதூரத்தை விட்டு விட்டு
கண்டி உயர்மலைகளின் கால்களில்
சிங்களதேசம் சேவித்துக் கொண்டநாள்.
வெள்ளைக்காரன் காலத்துப் பல்லக்கு
விடுதலைக்குப் பின்னர் ஆடம்பரக்காரென்றாச்சு.
அவ்வளவுதான்.
வெள்ளைக் கொக்குகளிடமிருந்து
ஆட்சியதிகாரம்
கறுப்புக் காகங்களிடம் கைமாறியது.
அவர்களிடமிருந்த எல்லாமே
இவர்களுக்கென்றாச்சு.
அவ்வளவுதான்.
தந்தைக்குப் பின் மைந்தன்;
புருஷனுக்குப் பின் மனைவி;
தாய்க்குப்பின் மகளென்றும்;
இடைக்கிடை சண்டியர்களுக்கெனவும்
மாங்கனித்தீவு ஏலம் போனது.
போராடாமற் கிடைத்த சுதந்திரமென்பதால்
சிங்களதேசமும் பேசாமற் கிடக்கிறது.
வேருக்கு நீரில்லையென்றாலும்
பேருக்காவது சுதந்திரம் கிடைத்ததேயென்று
சிங்கபுரி தோள்களைச் சிலிர்த்துக் கொண்டது.
தமிழர் தேசத்துக்குத்தான் '' சாக்குரல் '' பரிசாச்சு.
இறைமைகள் வெவ்வேறான இரண்டு தேசங்களின்
எல்லைகளை வெட்டி
வெள்ளையன் ஒன்றாக்கினான்.
போகும் போதாகிலும் பிரித்துத் தந்திருக்கலாம்.
பூனைக்கண்ணன் பேசாமற் போய்விட்டான்.
நாயக்க வம்சத்துக்கு நாடாகிவிட்டது.
இன்றதற்குப் பொன்விழாவாம்.
கண்டிமலைகளின் கழுத்தில் மாலைகட்டப்படுகிறது.
கங்கைகளின் கால்களில் சதங்கை பூட்டப்படுகிறது.
காற்றுக்குப் பொன்னாடையும்
முகில்களுக்கு மூக்குத்தியும் வழங்கப்படுகிறதாம்.
ஒப்பனைகளின் ஒய்யாரம் வெகுநேர்த்தி.
விடுதலைபெற்ற இரண்டு விழிகளில் ..
ஒன்றுக்கு மைதீட்டப் படுகிறது.
மற்றக் கண்ணுக்கு மண்ணெண்ணை ஊற்றப்படுகிறது.
இலங்கையின் பொன்விழாவே இதுதான்.
பன்றிகளைக் கூட்டிலடைப்பது போல
தமிழர்களை ''கோழிக்கூட்டில் '' அடைத்துவிட்டு;
உரத்துப்பேசும் உரிமையையும்;
நிமிர்ந்து நடக்கும் இறைமையையும்;
தமிழருக்கு இல்லாதழித்துவிட்டு
தன் சொந்த ஊரிலேயே நடந்து செல்லும்
சுதந்திரத்தையும் பறித்துவிட்டு;
கண்டியில் பொன்விழாவாம்.
வன்னியில் காட்டுவாசிகளாகிவிட்ட தமிழருக்கு
உண்ணும் அரிசியைத்தானும் ஒழுங்காய் அனுப்பாது
பட்டினிச்சாவுடன் பரிதவிக்க விட்டுவிட்டு
சுதந்திரப் பொன்விழாவாம்.
விடுதலையென்ன வென்றறியாது வாழும் தமிழனுக்கு
பொன்விழா என்ன? புதுவிழா என்ன?
தமிழனை அடக்கியாளும் சிம்மாசனத்துக்கு
சிங்கள இனம் மாறி , மாறி மன்னரை அனுப்பும்.
இப்போது சந்திரிகாவின் முறை.
பொன்விழாவுக்குப் பொருத்தமானவரின் கையில்
கண்டி நகரம் களைகட்டுகிறது.
சந்திரிகா தலதாமாளிகைக்கு ...
தங்கமுலாம் பூசுகின்றார்.
மாமன் கண்டிவீதி போடுவதற்கு
மண்ணும் கல்லும் பறிக்கின்றார்.
வேடிக்கையான கூட்டமடா.
'' ஹெரகொல்லை '' வேர்களுக்கு ...
திமிரடங்காச் செருக்கு இன்றும்தான்.
குடாநாட்டில் தேர்தலை நடத்திவிட்டு

## உலைக்களம்

\- வியாசன்

''கும்பிடு பூச்சிகளைக்'' கண்டிக்கழைத்துச் சென்று
''இலங்கைத் தேசியம்'' மீண்டுமெழுந்ததென்று
முழங்கப் போகின்றனர்.
வடக்கும், கிழக்கும் தெற்குடன் இணைந்ததென்று
கண்டியின் எண்கோண மண்டபத்தில்
' ஓர்ட்கிட்'' மலர்களிடையேயிருந்து
சந்திரிகா ''சபதம் நிறைவேற்றுவார்.''
அத்துடன் அடுத்த தேர்தலுக்கு ஆயத்தமாகும் நாடு.
இதுதான் பொன்விழா.
இதற்குத்தான் இந்தவிழா.
குடாநாட்டுத் திருவிழாவில் சதிராடிவிட்டு
விமானமேறி விருந்துக்குப் போகப்போறவர்களே!
வன்னியில் குண்டெறிபவனை மன்னித்து
கொழும்பில் குத்துவிளக்கேற்ற அழைப்பவர்களே!
முற்றாகத்தமிழனை அழிக்கும்வரை
சிங்களத்துக்கு முண்டுகொடுக்கப் போகும் சீமான்களே!
வெக்கம், ரோஷம் பார்த்தால்
உங்கள் இலக்கை அடையமுடியாது.
விட்டுத்தள்ளுங்கள்.
பொன்விழா நேரத்தில் புகுந்துவிளையாடுங்கள்.
தமிழனே !
உன்னைப் போல் பாவம்செய்த ஜென்மம்
உலகத்திற் கிடையாது.
கண்களைத் திறக்காதிருக்கக் கடவது.
இந்தக் காட்சிகளை எப்படிக் காண்பது?
கலங்காதிரு தமிழா !
வன்னிமண் வரலாறுணர்த்தும்.
வீரம் நிமிர்ந்து விளையாடும்.
இது: பெறாத விடுதலையின் பொன்விழா.
நாங்கள் பெற்ற விடுதலையின் வெற்றிவிழா நடத்துவோம்
நாளை. O



www.eelamview.com